# කාර්යසාධන වාර්තාව සහ වාර්ෂික ගිණුම්

# செயற்திறன் அறிக்கையும் வருடாந்த கணக்குகளும்

# ANNUAL PERFORMANCE REPORT & ACCOUNTS

# 2014



## දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - මන්නාරම

## மாவட்டச் செயலகம் - மன்னார்

## DISTRICT SECRETARIAT-MANNAR

## உள்ளடக்கம்


1. செய்திகள் ........ III
   1.1. உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ........ III
   1.2. உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ........ IV
   1.3. மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் ........ V

2. மாவட்டச் செயலகம் பற்றிய அறிமுகம் ........ 01
   2.1. தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள் ........ 01
   2.2. எதிர்பார்ப்பு மற்றும் செயலக நடவடிக்கைகள் ........ 03

3. மாவட்டம் பற்றிய அறிமுகம் ........ 05
   3.1. மாவட்டத்தின் எல்லைகள் ........ 05
   3.2. மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் ........ 07
   3.3. மாவட்டத்தின் இயற்கை வளங்கள் ........ 11
   3.4. மாவட்டத்தின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் ........ 11
   3.5. மாவட்டத்தின் நீர்ப்பாசன முறை ........ 12
   3.6. மாவட்டத்தின் சனத்தொகை பரம்பல் ........ 13
   3.7. மாவட்டத்தின் காலநிலை ........ 14
   3.8. மாவட்டத்தின் அடிப்படை புள்ளி விபரங்கள் ........ 14

4. அலுவலக ஒழுங்கமைப்பு மற்றும் ஆளணி விபரம் ........ 15
   4.1. அலுவலக ஒழுங்கமைப்பு வரைபடம் ........ 15
   4.2. ஆளணி விபரம் ........ 16

5. செயலாற்றுகை ........ 18
   5.1. பொது நிர்வாக செயற்பாடுகள் ........ 18
      5.1.1. கிராம அலுவலர்களின் செயற்பாடுகள் ........ 18
      5.1.2. உள்ளகக் கணக்காய்வின் நடவடிக்கைகள் ........ 18
      5.1.3. வருமானச் சேகரிப்பு செயற்பாடுகள் ........ 20
      5.1.4. மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் செயற்பாடுகள் ........ 21
      5.1.5. தேர்தல்கள் திணைக்களச் செயற்பாடுகள் ........ 23
      5.1.6. பதிவாளர் நாயகத் திணைக்கள செயற்பாடுகள் ........ 24

5.1.7. அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் ........ 25
5.1.8. மோட்டார் போக்குவரத்து திணைக்களச் செயற்பாடுகள் ........ 26
5.1.9. ஓய்வூதியச் செயற்பாடுகள் ........ 27
5.1.10. தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களச் செயற்பாடுகள் ........ 28
5.1.11. நிர்வாகக்கிளையின் செயற்பாடுகள் ........ 30
5.1.12. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயற்பாடுகள் ........ 31
5.1.13. தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் செயற்பாடுகள் ........ 32

5.2. கலாச்சார மற்றும் சமூக சேவை ........ 33
5.2.1. கலாச்சார மற்றும் சமயச் செயற்பாடுகள் ........ 33
5.2.2. சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி செயற்பாடுகள் ........ 35
5.2.3 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகள் ........ 36
5.2.4. சமூக சேவைகள் செயற்பாடுகள் ........ 37
5.2.5. மாவட்ட விளையாட்டுப் பிரிவின் செயற்பாடுகள் ........ 38

5.3. அபிவிருத்தி செயற்பாடுகள் ........ 40
5.3.1. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழான மூலதன வேலைத்திட்டங்கள் -2014 ........ 40
5.3.2. கிராம அபிவிருத்தி திணைக்கள செயற்பாடுகள் ........ 43
5.3.3. திவிநெகும அபிவிருத்தி திணைக்களச் செயற்பாடுகள் ........ 46
5.3.4. காணி விவசாய திணைக்களச் செயற்பாடுகள் ........ 48
5.3.5. காணிப் பயன்பாட்டு திட்டமிடல் அபிவிருத்திச் செயற்பாடுகள் ........ 49
5.3.6. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிழான செயற்பாடுகள் ........ 51
5.3.7. வரிசைப்படுத்தப்பட்ட அமைச்சுக்களினதும் ஏனைய திணைக்களங்களினதும் செலவின விபரம் ........ 61

5.4. வருடாந்த கணக்குகள் ........ 62
5.4.1. டிஜிஎஸ்ஏ – 2 ........ 62
5.4.2. டிஜிஎஸ்ஏ – 3 ........ 63
5.4.3. டிஜிஎஸ்ஏ – 4 ........ 64
5.4.4. டிஜிஎஸ்ஏ – 5 (i) ........ 66
5.4.5. வருமானக் கணக்கு ........ 67
5.4.6. குறிப்பு – (ii) ........ 68

<u>மனித நேயமிகு அரச சேவையின் முன்னோடிகளாவோம்………..</u>



நல்லாட்சி எண்ணக்கருவினை மையமாகக் கொண்டு ஒழுக்கம மிக்கதொரு சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்படும் இக்காலகட்டமானது இலங்கை வாழ் மக்களிற்கு கிடைத்த ஒரு அரிய வரப்பிரசாதமாகும். இந்நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக, சிவில் நிருவாகத்தில் சாதகமான மறுசீரமைப்புக்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுத்து அவற்றை 2015ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்யவேண்டியது எமது முக்கியமான தேவைப்பாடாகக் காணப்படுகிறது.

நல்லாட்சியானது எண்ணக்கருக்களைக் கொண்டு அரசாங்கம் முன்னேடுக்கின்ற திட்டமிடல்கள் மற்றும் தீர்மானமெடுத்தல் செயற்பாடுகளில், அரச ஊழியர்களை பங்கேற்பவர்களாக மாற்றுதல், மற்றும் மாவட்டச் செயலாளர்கள் மூலமாக வெளிப்படைத்தன்மையான விதத்தில் பொதுமக்களுக்குப் பொறுப்புக் கூறுதல் என்பன இறையாண்மையின் பிரதான கூறுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

அரசாங்கத் துறையிலுள்ள முக்கியமான அமைச்சுகளுள் ஒன்றான உள்நாட்டலுவல்கள் அமைச்சானது புதிய அரசாங்கத்தினது 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ள அரசியலமைப்புத் திருத்தங்களை வகுப்பதிலும் பிரதேச நிர்வாகத்தில் வினைத்திறன் வாய்ந்ததும் உற்பத்தித் திறன் வாய்ந்ததுமான திட்டங்களை வகுப்பதிலும் பாரிய பங்கை ஆற்றுகின்றது.

நாட்டினது நிதிக்கொள்கைகளைப் பின்பற்றி பொதுமக்களது வரிப்பணம் எவ்வாறு செலவு செய்யப்படுகிறது என்பதை வெளிக்காட்டத்தக்க வகையிலான செயற்திறன் மதிப்பீடொன்றை 21 ஆம் நூற்றாண்டிற்கு பொருத்தமான வகையில் நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்தல் மிகப் பொருத்தமானதாக அமையும். பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தகைய அறிக்கைகளைத் தயாரித்தல் என்பது, அரசு பொதுமக்கள் மட்டில் கொண்டுள்ள பொறுப்புக் கூறலையும், வினைத்திறனையும், உற்பத்தித் திறனையும், வெளிப்படைத் தன்மையையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

அரசாங்க சேவையின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றி, என்னுடன் இணைந்து மக்களிற்கு சிநேகபூர்வமான சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற அமைச்சின் செயலாளர் மற்றும் மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து பணியாட் தொகுதியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், 2015 ஆண்டிற்கான இலக்குகளை வெற்றி கொள்வதற்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கின்றேன்.

எம்.ஜோசப் மைக்கல் பெரேரா(பா.உ),
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரச சேவையின் நல்லாட்சியை குறிக்கோளாகக் கொண்ட எதிர்காலத்தை நோக்கி...



இந் நாட்டின் உன்னதமானதும் விசேடமானதுமான அமைச்சாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இனங்காணப்பட்டுள்ளது. நாடுபூராகவும் முறைசார் நிர்வாக கட்டமைப்பையும் விரிவாக்க வலையமைப்பையும் தன்னகத்தே கொண்டுள்ள இவ்வமைச்சு மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கு பரந்துபட்ட பங்களிப்பினை நல்கி வருகின்றது. அதுமட்டுமன்றி, அபிவிருத்தியின் பலாபலன்களை சமூகத்தின் அடிமட்டம் வரை கொண்டு செல்வதற்கும் உறுதுணை புரிந்து வருகின்றது.

2014 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் உள்ளடங்கிய, ‘வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்கு அறிக்கைகளுக்கு’ ஆசிச் செய்தியொன்றை வழங்கக் கிடைத்தமையை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

கடந்த ஆண்டு பூராகவும் அரசதுறைப் பணிகளை ஒழுங்கமைப்பதில் மாவட்டச் செயலகங்கள் முனைப்புடன் செயற்பட்டன. அது தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்ட அளப்பரிய சேவைகளை நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற மாவட்டச் செயலகங்களும், பிரதேச செயலகங்களும் பரந்துபட்ட மக்கள் சேவைக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றன. 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றவாறு மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்து சிநேகபூர்வமான சேவைகளை வழங்கும் பொருட்டு, மாவட்டச் செயலகங்களினால் நவீன தகவல் தொழிநுட்பங்கள் கையாளப்படுகின்றன.

இதுவரை காலமும் நாம் பெற்ற அனுபவப் பாடங்களை முதன்மையாகக் கொண்டு, பொதுமக்களிற்கு வினைத்திறன் வாய்ந்த அரசசேவையை வழங்கும் பொருட்டு 2015ஆம் ஆண்டில் புதிதாக “உள்நாட்டலுவல்கள் அமைச்சு” தாபிக்கப்பட்டது. நாட்டின் நல்லாட்சிக் கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக எமது அமைச்சின் வழியாக உரிய பங்களிப்பினை நல்குவோம். எனவே உன்னதமான அரச சேவையினை வழங்கத்தக்க எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடுவோம்!

எஸ்.டீ.ஏ.பீ.பொரலஸ்ஸ,<br>
செயலாளர்,<br>
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

## மாவட்டச் செயலகம் - மன்னார்

### மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபரின் செய்தி



2014ம் ஆண்டுக்குரிய மன்னார் மாவட்ட செயலகத்தின் கணக்கறிக்கையின் அடைவு தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிப்பதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வறிக்கையானது மன்னார் மாவட்ட செயலகம், ஐந்து பிரதேச செயலகங்கள் மற்றும் அமைச்சுக்களின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் திறமையான நிகழ்ச்சிகள், திட்டங்கள், செயல்பாடுகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இச்செயற்பாடுகளுக்கான நிதியானது 2013 ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இந்நிதியானது சிக்கனமாகவும் திறனான முறையிலும் பயன்படுத்தப்படல் வேண்டுமெனும் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சேவையானது, அனைத்து திணைக்களங்களின் கிளைகள் மற்றும் பிரதேச செயலகங்கள் அனைத்தும் மாவட்ட செயலகத்துடன் இணைந்து மிகவும் பலமான முறையில் செயல்பட வழிவகுக்கின்றது.

மேலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் திவிநெகும நிகழ்ச்சித்திட்டம் / சமுர்த்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் திருப்தியான முறையில் முன்னெடுக்கப்படும் திட்டமாகும். இதனைவிட ஏனைய வரிசைப்படுத்தப்பட்ட அமைச்சுக்களின் கீழ் ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டின் கீழ் குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் பயனுள்ள முறையில் மன்னார் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதும் குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேலும் இச்செயற்பாடுகளுக்காக பொதுமக்களின் தொழில் முன்னேற்றத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர், உதவி நல்கியவர்கள், இம்மாவட்டத்தின் மக்களின் அபிவிருத்தி செயல்பாடுகளில் பங்கு பற்றியவர்கள் மற்றும் இதனைத்தவிர, மக்களுக்கு மிகவும் தரமானதும் பயனுள்ளதுமான சேவையை வழங்க பல வழிகளிலும் அறிவுரை வழங்கியவர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக எனது சேவைக்கூடாகவும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் திணைக்களங்கள் வழங்கிய அறிவுரைகள் என்பவையும் மக்களுக்கு திறமையானதும் பயனுள்ளதும் தரமானதுமான சேவையை வழங்க பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியாகவும் வினைத்திறனுடனும் எல்லா விடயங்களிலும் ஒத்துழைப்பு வழங்கி வரும் அனைத்து பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலக திணைக்கள தலைவர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அலுவலர்களுக்கும் எனது விசேடமான நன்றியைத் தெரிவிப்பது எனது தலையாய கடமையாகும்.

நன்றி!

எம்.வை.எஸ் தேசப்பிரிய
மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்

## 2. மாவட்டச் செயலகம் பற்றிய அறிமுகம்

### 2.1

### தூரநோக்கு

நிலையான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதன் மூலம் மன்னார் மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

### பணிக்கூற்று

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் நடவடிக்கைகளை இணைத்து கண்காணிப்பதன் மூலம் அந்நிறுவனங்களின் செயலாற்றுகையை முன்னேற்றுவதுடன் அரசாங்கத்தினதும் பொதுமக்களினதும் எதிர்பார்பிற்கமைய குறைந்த செலவில் தரமான வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குதல்.

### குறிக்கோள்

மாவட்ட செயலகத்தின் குறிக்கோளானது அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் வேறுபட்ட சட்டங்களின் மூலம் கையளிப்புச் செய்யப்பட்ட தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தலும், சமூகபொருளாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை உருவாக்குதலும், அவற்றை கண்காணித்து நெறிப்படுத்துவதுடன் அவற்றின் நன்மைகளை சம்மந்தப்பட்டோர் அனுபவிப்பதை உத்தரவாதப்படுத்துதல்.


2013/11/13



## 2.2 எதிர்பார்ப்பு மற்றும் செயலக நடவடிக்கைகள்

**மாவட்டச் செயலக முறைகள், பயன்பாடுகள், வினைத்திறன், மற்றும் விளைதிறன் (உற்பத்தித் திறன்)**

- மாவட்ட மற்றும் பிரதேச மட்டச் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள்

ஊழியர்கள்/ உத்தியோகத்தர்களின் அனைத்து கடமைகளும் அது தொடர்பான நடவடிக்கைகள் (சுயவிபரக் கோவை, விடுமுறைகள், சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை நாட் கொடுப்பனவு, ஊழியர்களின் புகையிரத ஆணைச்சிட்டு, கடன் மற்றும் ஏனைய நடவடிக்கைகள்)

- பின்வரும் சேவைகளை மக்களுக்கு வழங்குவது அல்லது ஏனைய நிறுவனங்கள் மூலம் சேவைகளை பெற்றுக்கொள்ள இணைப்பினை ஏற்படுத்துதல்.
  - ✓ கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, வியாபார பதிவுச்சான்றிதழ், பிறப்பு இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ், மோட்டார் போக்குவரத்து இறைவரி அனுமதிப்பத்திரம்
  - ✓ பாதை அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள்
  - ✓ தேருநர் இடாப்பு பராமரித்தல் மற்றும் வழங்குதல்
  - ✓ காணிக்கான உறுதிகள் மற்றும் காணி பிணக்குகளை தீர்த்து வைத்தல்
  - ✓ வயோதிபர்களுக்கான கொடுப்பனவுகளை ஒதுக்கீடு செய்து வழங்குதல்
  - ✓ உளவியல் ரீதியாகவும், மனோ ரீதியாகவும் பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் உடல் நலத்திற்கும் ஆலோசனை வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
  - ✓ பெண்களை தலைவர்களாக கொண்ட குடும்பங்களுக்கு பயிற்சி மற்றும் ஊக்குவிப் புக்களை வழங்குதல்

**நிதி நடவடிக்கைகள் மற்றும் பரிமாற்றல் நடைமுறைகள் மூலம் எழுச்சிக்குள்ளாக்கி இலக்குகளை அடையும் மேலதிகமான செயல் பணிகள்**

- ✓ வினைத்திறமையுடன் (அனுமதியுடன் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம்) செலவினங்களை மேற்கொள்ளலும் கணக்கு வைத்தலும்
- ✓ ஊழியர்களுக்கான எல்லாவித கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுதல்
- ✓ கச்சேரியின் நானாவித வைப்புகளிலிருந்து நிதிப்பகிர்வு மற்றும் உரிய கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல்
- ✓ மாதாந்த, வருடாந்த கணக்குகள் மற்றும் ஏனைய கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய திணைக்களங்களுக்கும், பொது திறைசேரிக்கும் அனுப்பி வைத்தல்.
- ✓ ஓய்வூதியம் மற்றும் இதனோடு இணைந்த அனைத்து கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுதல்.
- ✓ மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் வழங்கல், சேவைகள் ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.
- ✓ வருடத்திற்கான கொள்ளல் திட்டங்களை தயாரித்தல், வருடாந்த சுற்றாய்வுகளை (பொருட்கணக்கெடுப்பு) மேற்கொள்ளுதல்.

**கலை கலாச்சார பண்புகளையும், விழுமியங்களையும் அதன் உயர் மதிப்புகளையும் ஊக்குவிக்கும் அமைப்பு நடவடிக்கைகள்**

மாவட்ட கலாச்சார, விளையாட்டு நிகழ்வுகள், தேசிய மட்ட, மாவட்ட மட்ட, விழாக் கொண்டாட்டங்களில் ஈடுபடுதல்.

**மாவட்ட வளங்களை பயன்படுத்தி வினைத்திறனுள்ள பயன்பாட்டுடன் திட்டங்களை வடிவமைத்தல்**

இதன் முழுமையான நடவடிக்கைகள் மாவட்ட திட்டமிடல் கிளையின் மூலமும், காணி பகிர்வு பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் மூலமும், மாவட்ட விவசாய அலகு மற்றும் அறிமுக அபிவிருத்தி கிளைகள் மூலமும் பூர்த்தி செய்யப்படுகின்றன.

**பொது மக்களை அனர்த்தத்திலிருந்து பாதுகாத்தல்**

இயற்கை அனர்த்தங்களிலிருந்து பொது மக்களை பாதுகாத்தல் (வெள்ளம், மண்சரிவு, வரட்சி) அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பங்களிப்புடன் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஆரம்ப வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

**மாவட்டத்தின் அடிப்படை புள்ளி விபரங்களை சேகரித்தலும் பராமரித்தலும்**

மாவட்டத்தின் புள்ளிவிபரக்கிளையின் மூலம் புள்ளி விபர நிகழ்வு பூர்த்திசெய்யப்படுகின்றது.

**பிரதேச மட்டத்திலான நிலையான அபிவிருத்திகள்**

பிரதேச மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளின் பேரில் திட்டமிடுதலும் இயல்பு நடவடிக்கைகளும்.

- ✓ வீதிகள், நீர்பாசனம் மற்றும் மின்சார வசதிகள் தொடர்பான அபிவிருத்திகள்
- ✓ பன்முகப்படுத்தப்பட்ட பாதீடுகள் மூலம் கிடைக்கப்பெறும் நிதி மூலத்தின் மூலம் மாவட்டத்திற்கான அபிவிருத்திகளை மேற்கொள்ளும் பொருட்டான நிதி பங்கீடும் வினைத்திறன் மிக்க கண்காணிப்பும்.
- ✓ அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் (திவிநெகும)
- ✓ வீடமைப்புத்திட்டங்களுக்கான வசதிகளை ஒழுங்கு செய்து வழங்குதல் போரினால் பாதிப்படைந்த மக்களுக்கு நட்டஈடு வழங்குதல்

# 3. மாவட்டம் பற்றிய அறிமுகம்

## 3.1 மாவட்டத்தின் எல்லைகள்:

மன்னார் மாவட்டமானது இலங்கையின் வடமேற்கு திசையில் அமைந்துள்ளது. இம் மாவட்டமானது, இலங்கைத் தீவின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இம்மாவட்டமானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்களினால் சூழப்பட்டுள்ளது. இது சிறு கரையோரப் பாதை மூலம் நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது பரப்பளவானது 2,002 சதுர கிலோ மீட்டராகும் ஆகும். ஐந்து பிரதேச செயலக பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன, மன்னார், நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகும்.



**பிரதேச செயலகவாரியாக பரப்பளவு**

| பிரதேச செயலகங்களின் விபரம் | பரப்பளவு | |
|---|---|---|
| | சதுர Km | வீதம் |
| மன்னார் நகரம் | 226.88 | 11.33 |
| நானாட்டான் | 129.25 | 6.46 |
| முசலி | 474.22 | 23.69 |
| மாந்தை மேற்கு | 658.90 | 32.91 |
| மடு | 512.82 | 25.61 |
| மொத்தம் | **2,002.07** | **100.00** |






## 3.2 மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம்:

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல அம்சங்களை மன்னார் மாவட்டம் கொண்டுள்ளது. திருக்கேதீஸ்வரத் திருத்தலம், மடு மாதா தேவாலயம், மன்னார்கோட்டை, அரிப்புக்கோட்டை, அரிப்பு அல்லி ராணிக்கோட்டை, ராமர் பாலம், தொங்குபாலம், வெளிச்சவீடு மற்றும் பெருக்குமரம் (Biobap Tree) போன்ற அதிசயங்கள் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன.





















ஈழத்து சிவாலயங்களுள் வரலாற்று புகழ் மிக்கதாகவும், 7ம் 8ம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களால் பாடல் பெற்ற பெருமைக்குரியதாகவும் திகழ்ந்து வருகின்றது. மன்னாரிலிருந்து தென் திசையாக சுமார் 6.5 மைல் தூரத்திலும், வடமேல் கடலோரத்திலிருந்து சுமார் 0.5 மைல் தூரத்திற்கப்பாலும் திருக்கேதீஸ்வர திருத்தலம் அமைந்துள்ளது. 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரினால் முழுமையாக அழிக்கப்பட்டது. மீண்டும் 1903ம் அண்டு மீளமைக்கப்பட்டது 1ம் கும்பாபிஷேகம் 1952ம் ஆண்டு இடம்பெற்றது.

வன்னிக்காட்டில் அமைந்துள்ள மடுத்திருத்தலம் வரலாற்றுப் பூர்வீகமானது என்பதில் எவ்வித கருத்து வேறுபாட்டிற்கும் இடமில்லை. வரலாற்றுக் குறிப்பின் படி 1659ம் ஆண்டு மாசி மாதம் 22ம் திகதி மன்னார் டச்சு ஆட்சியின் கைப்பற்றலில் வீழ்ந்த பொழுது பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதன் பொருட்டு மாந்தை நகரிலிருந்து வன்னிக்காட்டிலுள்ள குளத்தை அண்டி ஆரோக்கிய அன்னையின் சுருபத்தோடு குடியேறியதே இத்திருத்தலம் ஆகும்.







மன்னாரின் பிரபல்யத்திற்கு காரணமான பெருக்க மரம் அரேபிய வியாபாரிகளினால் 15ம் நூற்றாண்டிற்கு முன்னர் கொண்டுவரப்பட்டது. மன்னார் பள்ளிமுனையில் காணப்படும் இப் பெருக்க மரமானது 7.5மீட்டர் உயரத்தினையும் 19.51 மீட்டர் சுற்றளவினையும் கொண்டது. இவ் மரமானது சுமார் 750 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. வியாபார நோக்கத்திற்காக இங்கு வந்த அரேபியர்களின் உணவுத் தேவையை இது பூர்த்தி செய்தது. நீள்வட்ட வடிவ பழத்தினையும் கொண்டது.




இவ்வெளிச்ச வீடானது 1915ம் ஆண்டு கட்டப்பட்டது. இது 64 அடி உயரத்தினை கொண்டது. இவ்வெளிச்சவீட்டின் வெளிச்சமானது ஒவ்வொரு 5 செக்கனிற்கும் வெளிச்சத்தைக் கொடுப்பதுடன் இதன் ஒளியானது 10 கடல் மைல் தொலைவு வரையும் தென்படும் என கூறப்படுகின்றது. இது மன்னாரின் வடமேல் திசையிலுள்ள தலைமன்னாரில் அமைந்துள்ளது. தலைமன்னாரிலுள்ள துறைமுகம் ஊடாக இந்தியாவிற்கு பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளுக்கு உதவியாகவுள்ளது.

இத்தொங்கு பாலமானது 1935ம் ஆண்டு அருவியாற்றைக் கடப்பதற்காக அமைக்கப்பட்டது. இப்பாலமானது மதவாச்சி மன்னார் வீதியிலுள்ள மடுச்சந்தியிலிருந்து அதனையொட்டியதாக குஞ்சுக்குளம் என்னும் கிராமத்தில் உள்ளது. இப்பாலத்தின் நீளம் 150m அகலம் 1.2m ஆகும். மழைக்காலத்தில் இப்பாலத்தின் மேலாக நீர் பாய்வதுடன் கிராமத்தினையும் ஊடறுத்து நீர் பாயும் எனவும் கூறப்படுகின்றது. மக்கள் இப்பாலத்தினை ஒரு பொழுது போக்கிடமாக பாவனை செய்து மகிழ்கின்றார்கள்.







இக்கோட்டையானது போர்த்துக்கேயரால் கட்டப்பட்டதுடன் 1658ம் ஆண்டு ஒல்லாந்தரினால் கைப்பற்றப்பட்டது. இது ஆங்கிலேய கப்பல் தளபதியான றோபட்நொக்ஸ் என்பவரிடமிருந்து 2ம் ராஜசிங்கனால் 1659ம் ஆண்டு கைப்பற்றப்பட்டது. இலங்கையின் “பெற்றிக்நோத்” என்பவரின் ஆட்சிக்காலத்தில் உத்தியோகத்தரின் சுற்றுலா விடுதியாக மாற்றப்பட்டது.







இவ் அல்லிராணி கோட்டையானது மன்னார் நகரிலிருந்து சுமார் 45km தூரத்தில் உள்ள முத்தரிப்புத் துறையில், அமைந்துள்ளது. அக்கோட்டையிலிருந்து மாதோட்டத்திற்கான ஒரு சுரங்கப் பாதை இருப்பதாக நம்பப்படுகின்றது. கோட்டையின் பல பகுதிகள் கடலரிப்பினால் அரிக்கப்பட்டுள்ளதுடன் அடையாளச்சுவடுகள் மாத்திரம் மிச்சமாக உள்ளது. இக் கோட்டையின் கீழ் தளத்தில் சிறிய 4 படுக்கை அறைகளும் 1ம் மாடியில் மிகப் பெரிய சாப்பாட்டு அறையும் சிறப்பான படுக்கை அறை ஒன்றும் காணப்படுகின்றன. டொரிக் என்பவரால் இக்கோட்டையின் வரைபடம் வரையப்பட்டு அவரின் மேற்பார்வையின் கீழ் கட்டப்பட்டது.









இக்கோட்டையானது மன்னார் நகரில் போர்த்துக்கேயரினால் 1560ம் ஆண்டில் கட்டப்பட்டது. இது 4 பக்கங்களிலும் பாதுகாப்பு சுவரினால் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதில் 3 பக்கங்கள் பாதுகாப்பு அரணாகவும் ஒரு பக்கம் போர்க்காலத்தில் போர் வீரர்கள் கடலூடாகத் தப்பிச் செல்லக் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோட்டையானது பின்னர் ஒல்லாந்தரின் கடற்படைத் தளமாக மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டது.









இப்பாலமானது மணல் மற்றும் சுண்ணக்கல்லை கொண்டு இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் முகமாக அமைந்துள்ளது. இப்பாலமானது தமிழில் ராமர்பாலம் எனவும், ஆங்கிலத்தில் அடம்ஸ் பாலம் எனவும், மலையாளத்தில் ராமசேது பாலம் எனவும் அழைக்கப்படுகின்றது. இது 30km நீளத்தினையும் 1.5m - 3.5m நீர்மட்டம் உடைய மணல் திட்டையும் உடையது. வரலாற்று ரீதியான பதிவுகளைப் பார்க்கும் போது 15ம் நூற்றாண்டில் இப்பாலத்தினூடாக மக்கள் போக்குவரத்தினை மேற் கொண்டுள்ளார்கள் என கூறப்படுகின்றது.

### 3.3.மாவட்டத்தின் இயற்கை வளங்கள்









### 3.4 மாவட்டத்தின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம்

மன்னார் மாவட்டத்தின் பிரதான வாழ்வாதாரங்களாக விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு என்பன காணப்படுகின்றது. இதில் 70% விவசாயத்திலும், 25% மீன்பிடியிலும், 5% மக்கள் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். மேலும் பொதுவாக 61.4% மக்கள் நெற்செய்கையிலும் ஈடுபடுகின்றனர்.

மேலும் பொருளாதார செயற்பாடுகளில் ஆண்களுடைய பங்களிப்பு 70.5% ஆகும். 35-39 வயதுடைய ஆண்களும், 25-29 வயதுடைய பெண்களும் தொழிலில் ஈடுபடுகின்றனர். 5% வேலையில்லாதோர் காணப்படுகின்றனர்.

### 3.5 மாவட்டத்தின் நீர்ப்பாசன முறை

✓ **தேக்கம் அணைக்கட்டு** :

இது மல்வத்து ஓயாவுக்கு குறுக்காக அமைக்கப்பட்டு இரு வாய்க்கால்களுக்கு ஊடாக நீர் திறந்து விடப்படுகின்றது. அதில் ஒரு கால்வாய் கட்டுக்கரைக்குளத்திற்கும் மற்றைய கால்வாய் அகத்திமுறிப்புக்குளத்திற்கும் பாய விடப்படுகின்றது. மேலதிக நீரானது அருவியாறு ஊடாக கடலினை அடைகின்றது.

✓ **கட்டுக்கரை குளம்**:

1969ம் ஆண்டு நீர்பாசனத்திணைக்களத்திற்குள் உள்வாங்கப்பட்டது. இக்குளத்திற்கான நீரானது 16.25 மைல் நீளமான அருவியாற்றினூடாக வந்தடைகின்றது. இக்குளத்தின் நீளம் 4.5 மைலாகும். 31,500 ஏக்கர் அடி நீர் உள்ளது. 30,000 ஏக்கர் வயல் காணிகளுக்கு நீர் பாய்ச்சப்படுகின்றது. 10 வாண் கதவுகளைக் கொண்டுள்ளது.

மேலும் வியாயாத்திக்குளம், அகத்திமுறிப்புக்குளம் போன்ற குளங்களிலிருந்தும் சிறு குளங்களுக்கு நீர் அனுப்பிவைக்கப்படுகின்றது.












## 3.6 மாவட்டத்தின் சனத்தொகை பரம்பல்:

### பிரதேச செயலகவாரியாக சனத்தொகை

| பிரதேச செயலகங்களின் விபரம் | மொத்த சனத்தெகை |
|---|---|
| மன்னார் நகரம் | 72,675 |
| நானாட்டான் | 21,069 |
| முசலி | 29,184 |
| மாந்தை மேற்கு | 25,489 |
| மடு | 12,773 |
| **மொத்தம்** | **161,190** |




### இன ரீதியாக சனத்தொகை

| இனம் | சனத்தெகை |
|---|---|
| தமிழர் | 90,258 |
| இஸ்லாமியர் | 69,966 |
| சிங்களவர் | 966 |
| மொத்தம் | 161,190 |



### 3.7.மாவட்டத்தின் காலநிலை

மன்னார் மாவட்டமானது ஒரு உலர் வலய பிரதேசமாகவும், கூடிய வெப்பநிலையை உடைய மாவட்டமாகவும், குறைந்த அளவு மழைவீழ்ச்சி உடைய மாவட்டமாகவும் காணப்படுகின்றது. மாவட்டத்தின் வெப்பநிலை எல்லையானது 28c-33c ஆகவும், சராசரி மழைவீழ்ச்சியானது 74mm-104mm ஆகவும் காணப்படுகின்றது.

### 3.8.மாவட்டத்தின் அடிப்படை புள்ளி விபரங்கள்

- ✓ மாவட்டத்தின் பெயர் : மன்னார்
- ✓ மாகாணத்தின் பெயர் : வட மாகாணம்
- ✓ மொத்த நிலப்பரப்பு : 2,002 sq.km
- ✓ பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை : 05
- ✓ கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை : 153
- ✓ கிராமங்களின் எண்ணிக்கை : 622
- ✓ வாக்கெடுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை : 70
- ✓ மாநகர சபைகளின் எண்ணிக்கை : இல்லை
- ✓ நகர சபைகளின் எண்ணிக்கை : 01
- ✓ பிரதேச சபைகளின் எண்ணிக்கை : 04
- ✓ சுற்று விடுதி, மற்றும் அரச விடுதி : 02 (01- தொடர் வேலை)
- ✓ வலயக்கல்வி பணிமனை அலுவலர்கள் : 175
- ✓ பாடசாலை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை : 144, மற்றும் 1,994 ஆசிரியர்கள்
- ✓ பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை : 06
- ✓ மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை : 05
- ✓ உள்ளுராட்சி அதிகார சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை : 46
- ✓ சனத்தொகை : 161,190– (கணக்கெடுப்பு 2014)

## 4. அலுவலக ஒழுங்கமைப்பு மற்றும் ஆளணி விபரம்

### 4.1 அலுவலக ஒழுங்கமைப்பு வரைபடம்



## 4.2 ஆளணி விபரம்

**மாவட்டச் செயலகம்: மன்னார்**

| வகை | சேவை தரம்/மட்டம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| **சிரேஸ்ட மட்டம்** | | | | |
| அரசாங்க அதிபர் | SLAS I | 01 | 01 | - |
| மேலதிக அரசாங்க அதிபர் | SLAS I | 01 | 01 | - |
| உதவி மாவட்ட செயலாளர் | SLAS III | 01 | 01 | - |
| பிரதம கணக்காளர் | SLActS I | 01 | 01 | - |
| பிரதம உள்ளக கணக்காய்வாளர் | SLActS I | 01 | 01 | - |
| கணக்காளர் | SLActS III | 01 | 01 | - |
| பொறியியலாளர் | SLES III | 01 | 01 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | PMAS Supra | 01 | - | **01** |
| **இரண்டாவது மட்டம்** | | | | |
| பாதீட்டு உதவியாளர் | Budget Asst. Service | 01 | - | **01** |
| அபிவிருத்தி இணைப்பாளர் | Development Co-ord Service | 01 | 01 | - |
| பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் I | PMAS I | 04 | 04 | - |
| | | | | |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | DO | 15 | 13 | **02** |
| பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் II & III | PMAS II & III | 17 | 16 | **01** |
| | | | | |
| தரவு பதிவாளர் | DEO | 01 | - | **01** |
| மொழிபெயர்ப்பாளர் | TS | 01 | - | **01** |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLTS | 01 | - | **01** |
| தோழில்நுட்ப உதவியாளர் | TA | 01 | 01 | - |
| படவரைஞர் | SLTS | 01 | - | **01** |
| **ஆரம்ப மட்டம்** | | | | |
| சாரதி | DS | 07 | 04 | **03** |
| | | | | |
| விடுதி காப்பாளர் | OES | 01 | 01* | - |
| புத்தகம் கட்டுபவர் | OES I | - | - | - |
| ஆராய்ச்சி | OES I | 01 | 01 | - |
| தொலைபேசி இயக்குனர் | OES I | 01 | - | **01** |
| காவலாளி | OES I & II | 02 | 02 | - |
| | | | | |
| சைக்கிள் தகவலாளர் | OES II & I | 01 | 01 | - |
| அலுவலகப் பணியாளர் | OES II | - | - | - |
| | | | | |
| அலுவலக பராமரிப்பாளர்/ தோட்டத் தொழிலாளர் | OES III | 02 | 02 | - |
| துப்பரவுத் தொழிலாளி | OES III | 01 | - | **01** |
| | | | | |

**பிரதேச செயலகங்கள் : மன்னார் மாவட்டம்**

| வகை | சேவை தரம்/மட்டம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| **சிரேஸ்ட மட்டம்** | | | | |
| பிரதேச செயலாளர் | SLAS I | 05 | 05 | - |
| உதவிப் பிரதேச செயலார் | SLAS III | 05 | 01 | **04** |
| கணக்காளர் | SLActS III | 05 | 05 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | PMAS Supra | 05 | - | **05** |
| நிர்வாக உத்தியோகத்தர் (GNN) | GN Supra | 05 | 01 | **04** |
| **இரண்டாவது மட்டம்** | | | | |
| அபிவிருத்தி இணைப்பாளர் | Development Co-ord Service | 05 | 04 | **01** |
| பொது முகாமைத்துவ உதவியாளர்– தரம் I | PMAS I | 20 | 04 | **16** |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | DO | 25 | 11 | **14** |
| பொது முகாமைத்துவ உதவியாளர் – தரம் II & III | PMAS II & III | 91 | 72 | **19** |
| தரவு பதிவாளர் | DEO | 03 | - | **03** |
| மொழிபெயர்பாளர் | Translator Service I | 05 | - | **05** |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLTS | 05 | - | **05** |
| தோழில்நுட்ப உதவியாளர் | TA | 05 | 04 | **01** |
| கிராம சேவையாளர் | GNS I & II | 153 | 134 | **19** |
| **ஆரம்ப மட்டம்** | | | | |
| சாரதி | Driver Service | 10 | 10 | - |
| காவலாளி | OES II | 10 | 05 | **05** |
| சைக்கிள் தகவலாளர் | OES II | 05 | 04 | **01** |
| அலுவலக பராமரிப்பாளர்/ தோட்டத் தொழிலாளர் | OES III | 10 | 08 | **02** |
| துப்பரவுத் தொழிலாளி | OES III,II, I | 05 | 03 | **02** |
| | | | | |

| வகை | முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கமைய அனுமதித்த ஆளணி விபரம் | பதவி ஆளணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| **மாவட்டச்செயலகம்** | | | |
| **சிரேஷ்ட நிலை மட்டம் A** | 01 | 01 | - |
| **மூன்றாம் நிலை மட்டம் B** | 07 | 06 | 01 |
| **இரண்டாம் நிலை மட்டம் C** | 43 | 35 | 08 |
| **ஆரம்ப நிலை மட்டம் D** | 16 | 11 | 05 |
| **தற்காலிகம்**<br>**அமையம்**<br>**ஒப்பந்தம்** | | -<br>-<br>06 | |
| **பிரதேச செயலகங்கள்** | | | |
| **மூன்றாம் நிலை மட்டம் B** | 25 | 12 | 13 |
| **இரண்டாம் நிலை மட்டம் C** | 312 | 229 | 83 |
| **ஆரம்ப நிலை மட்டம் D** | 40 | 30 | 10 |
| **தற்காலிகம்**<br>**அமையம்**<br>**ஒப்பந்தம்** | | -<br>-<br>14 | |

# 5. செயலாற்றுகை

## 5.1 பொது நிர்வாக செயற்பாடுகள்

### 5.1.1 கிராம அலுவலர்களின் செயற்பாடுகள்

| பிரதேச செயலகப் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|
| மன்னார் நகரம் | 49 |
| நானாட்டான் | 31 |
| மாந்தை மேற்கு | 36 |
| மடு | 17 |
| முசலி | 20 |
| **மொத்தம்** | 153 |

இம்மாவட்டம் 153 கிராம அலுவலர் பிரிவுகளைக்கொண்டிருந்தபோதிலும் 01.01.2014 இல் 110 கிராம அலுவலர்கள் கடமையாற்றி வந்தனர். 43 கிராம அலுவலர் பிரிவுகள் வெற்றிடமாக இருந்தன. 2013.05.04 இல் நடைபெற்ற போட்டிப்பரீட்சைமூலம் கிராம அலுவலர் தரம் III இற்கு நியமனம் பெற்ற 30 கிராம அலுவலர்கள் 10.03.2014 தொடக்கம் 3 மாத காலப்பயிற்சியினை மாவட்டச்செயலகம் மற்றும் பிரதேச செயலகப்பிரிவு கிராம சேவையாளர் பிரிவுகளில் தமது பயிற்சியினை நிறைவுசெய்து 10.06.2014 இல் தமது நிரந்தர நியமனத்தை பெற்றுள்ளனர். இதனைத்தொடர்ந்து 31.12.2014 இல் 19 வெற்றிடங்கள் காணப்படுகின்றது. மேலும் மேற்படி நடைபெற்ற போட்டிப்பரீட்சையின் பிரகாரம் 02வது சுற்றில் 07 கிராம அலுவலர்கள் 2014.10.15 இல் பயிற்சிக்காக தெரிவாகியுள்ளனர். பிரதேச செயலகங்களுக்கு கடமைஇணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

### 5.1.2 உள்ளகக் கணக்காய்வின் நடவடிக்கைகள்

“ உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கையானது ஸ்தாபனத்தினது செயற்பாட்டின் பெறுமதியைக் கூட்டவும் வடிவமைக்கப்பட்டுள்ள நோக்கத்தை உறுதிப்படுத்தவும் ஆலோசனை வழங்கும் ஒரு நடவடிக்கையாகும். இது அபாய முகாமைத்துவத்தின் பயன்தரும் தன்மை, கட்டுப்பாடு மற்றும் ஆட்சி வழிமுறைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்து முன்னேற்றுவதற்காக முறையான மற்றும் ஒழுங்கான அணுகு முறைகளைக் கொண்டுவந்து ஸ்தாபனத்தின் நோக்கங்களை அடைவதற்கும் உதவுகின்றது” என்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரினால் 2009.10.07 ஆந் திகதியில் வெளியிடப்பட்டுள்ள DMA/2009/03 எனும் இலக்கமுடைய சுற்றறிக்கையின் 23 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2014 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வினால் மன்னார் மாவட்ட செயலகத்திலும் மற்றும் அதன் கீழுள்ள 05 பிரதேச செயலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள செயல் திறன்கள் பின்வருமாறு:

01. மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு நாட்டுக்கு வெளியே வசித்து வரும் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு 05 பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆவணங்களில் நம்பகத் தன்மையை அறிந்து கொள்ள முடியாதபடியால் அக்கொடுப்பனவுகள் 2014 செப்ரம்பர் மாதத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டு அக்கொடுப்பனவுகள் யாவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மூலம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

02. மாவட்ட செயலகத்திலும் மற்றும் 05 பிரதேச செயலகங்களிலும் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளை வழங்கிய தனியார் நிறுவனங்களுக்கு 1001 மற்றும் 1003 ஆகிய செலவு விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த கொடுப்பனவுகள் 1405 எனும் செலவு விடயத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

03. மன்னார் மாவட்ட செயலகத்திலும் மற்றும் 05 பிரதேச செயலகங்களிலும் காணப்படும் கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளுக்காகக் காசுப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்கள் வாக்குப்பணப் பதிவேட்டின் 12 ஆம் நிரலில் பதிவதற்குரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

04. முடிவடைந்த வருடத்திற்கான கொடுப்பனவுகள் எதுவும் நடப்பு வருடத்தில் வழங்கப்படுகின்ற போது அதனை வாக்குப்பணப் பதிவேட்டின் 14 ஆம் நிரலில் பதிவதற்குரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

05. நிதி ஒழுங்குவிதி 156(5) ஐப் பின்பற்றாது வாக்குப்பணப் பதிவேடுகளில் டிபெக்ஸ் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படாத வகையில் தவிர்க்கப்பட்டுள்ளது.

06. நிதி ஒழுங்குவிதி 156(6) இன்படி ஆவணங்கள் சரியான கட்டுப்பாட்டில் ஒழுங்காகவும் நல்ல நிலையிலும் வைத்துக் கொள்வதற்குரிய சரியான முறைமை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

07. நிதி ஒழுங்குவிதி 260 இன்படி மூன்றாம் நபர்களுக்குரிய கொடுப்பனவுகள் சரியான குழாத்தினருக்குக் காசோலைகள் மூலம் வழங்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

08. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரினால் 2009.06.09 ஆந் திகதியில் வெளியிடப்பட்டுள்ள DMA/2009(01) எனும் இலக்கமுடைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி 2014 ஆம் ஆண்டுக்குரிய 03 காலாண்டுகளுக்குரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திகதியும் மற்றும் அதற்காகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்திய திகதியும் பின்வருமாறு:

09.

| காலாண்டுகளின் பெயர்கள் | திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திகதி | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்திய திகதி |
|---|---|---|
| **முதலாம் காலாண்டு** | 20.03.2014 | 21.03.2014 |
| **இரண்டாம் காலாண்டு** | 31.07.2014 | 25.08.2014 |
| **மூன்றாம் காலாண்டு** | 31.10.2014 | 29.12.2014 |

1) முதலாம் காலாண்டுக்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில், முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 07 சுற்றிக்கைகளினதும் பயன்பாடு பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

2) இரண்டாம் காலாண்டுக்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில், கொடுப்பனவு முறையில் காணப்படும் ஒழுங்கீனங்களும் மற்றும் குறைபாடுகளும் சுட்டிக்காட்டப்பட்டு அவைகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு தடுக்கப்பட்டது.

3) மூன்றாம் காலாண்டுக்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் மாவட்ட செயலகத்தின் நிதி முகாமைத்துவப் பிரிவில் பின்பற்றி வந்த முறையற்ற அரச நிதி ஏற்பு நடைமுறை பற்றி விளக்கமளிக்கப்பட்டதுடன் இந்நடைமுறையைத் தவிர்த்துக் கொள்வதற்காக நிதி ஒழுங்கு விதி 143(3),166,182,183,184 மற்றும் 365 ஆகியவற்றுக்கு அமைவாக ஆலோசனையும் மற்றும் அறிவுரையும் வழங்கப்பட்டு சரியான முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 5.1.3. வருமானச் சேகரிப்பு செயற்பாடுகள்

2014ம் வருடத்தில் மாவட்டச் செயலகத்தினால் பெறப்பட்ட வருமான விபரம் பின்வருமாறு,

| தலைப்பு | விவரணம் | தொகை |
|---|---|---|
| 1003.07.02 | பதிவாளர் நாயகத் திணைக்களப் பதிவுக்கட்டணம் | **2,700,429.92** |
| 1003.07.03 | தனியார் மரப்போக்குவரத்து | **299,576.00** |
| 1003.07.99 | பிற வருமானங்கள் | **33,150.00** |
| 1003.07.05 | பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புற்ற அனுமதிப்பத்திரக் கட்டணம் | **6,450.00** |
| 2002.01.01 | அரசாங்கக் கட்டடங்கள் மீதான வாடகை | **989,474.15** |
| 2002.01.99 | பிற வாடகைகள் | **1,148,091.00** |
| 2002.02.99 | வட்டி | **1,571,623.58** |
| 2003.02.06 | தாவர விலங்கியல் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டணம் | **3,350.00** |
| 2003.02.13 | பரீட்சைக்கட்டணம் | **717,200.00** |
| 2003.02.14 | மோட்டார் வாகன கட்டணம் | **6,740,373.00** |
| 2003.02.99 | பிற சில்லறைப்பொருட்கள் | **40,575.48** |
| 2003.04.00 | மோட்டார் சைக்கில் வழங்கல் | **44,085,000.00** |
| 2003.99.00 | பிற வருமானங்கள் | **6,360,089.28** |
| 2004.01.00 | விதவைகள் அனாதைகள் பங்களிப்பு | **6,374,601.21** |
| 2006.02.00 | மூலதனச் சொத்துச்களின் விற்பனை | **3,956,895.00** |
| **மொத்தம்** | | **75,026,878.62** |

### 5.1.4. மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் செயற்பாடுகள்

**“ பூகோள ரீதியாக போட்டிமிக்க தொழிற்படையொன்றைக் கட்டியெழுப்புதல், மற்றும் மனிதவளத்தின் முழுப்பலத்தையும் சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக ஈடுப்படுத்தலாகும்” .**

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அலுவலர்கள் 2013ம் ஆண்டு முதல் மன்னார் மாவட்டத்திலும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு இவ்வலுவலர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சின்கீழ் இயங்கி வந்த மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களம் தற்போது நாடளாவிய ரீதியில் மாவட்டச்செயலகங்கள் மற்றும் பிரதேசசெயலகங்கள் மூலமாகத் தனது வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

இதன் பிரகாரம் 2014ம் ஆண்டு மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகரம், நானாட்டான், முசலி பிரதேச செயலகங்களில் கீழ்வரும் பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டுள்ளன.

1. க.பொ.த சாதாரண / உயர்தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் விழிப்பூட்டல் கருத்தரங்குகள்
2. தேவைபாட்டின் மீதான பயிற்சிநெறி
3. முயற்சியாண்மை பயிற்சிநெறி
4. ஆசிரியர்களை விழிப்பூட்டல் நிகழ்ச்சி
5. சுயதொழிலுக்கு ஊக்குவித்தல்
6. தொழில்சவாலை வெற்றிக்கொள்ளல் நிகழ்ச்சி என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறிகளில் பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகியோர், சுயதொழிலை ஆரம்பிக்க விரும்புவோர் கலந்து பயன்பெறலாம். மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறிகள் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மனிதவள அபிவிருத்தி அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் மனிதவள அபிவிருத்தி அலுவலர்கள், தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன. இறுதியாக தொழில் வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள் / மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறிகள் தேவைப்படுவோர் மனிதவள அபிவிருத்தி அலுவலர்களை (HRDO) மாவட்ட, பிரதேச செயலகக்காரியாலங்களில் சந்தித்து தங்கள் பெயர்விபரங்களை பதிவு செய்வதுடன் தொழில்வாய்ப்புகள் / பயிற்சிகள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ளலாம்





**தேசிய உற்பத்தித்திறன் விருதுகள்**

மகிந்த சிந்தனைக்கு அமைய உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு செயற்திட்டமானது நாடுமுழுவதும் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தவகையில் மன்னார் மாவட்டசெயலகம் மற்றும் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட 05 பிரதேசசெயலகங்களும் உற்பத்தித்திறன் ஊக்குவிப்புச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்திப் புதுப்பொலிவுடன் காட்சியளிப்பதுடன் பொதுமக்களுக்கான சேவைகளையும் குறுகிய காலத்திற்குள் வழங்கிவருகின்ற இவ்வேளையில் உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சினால் வழங்கப்படுபடும் " தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் 2012/2013" என்னும் விருதினை மன்னார் மாவட்டத்தில் முதல் முறையாக மன்னார் நகர பிரதேச செயலகம் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும், நானாட்டான் பிரதேச செயலகம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினையும் மடு பிரதேச செயலகம் தேசிய மட்டத்தில் நான்காம் தரச் சித்தியினையும் பெற்றுக்கொண்டமையினையிட்டு எமது அரசாங்க அதிபர், அனைத்து அலுவலர்கள் சார்பாக விருதுகள் பெற்ற பிரதேச செயலக பிரதேச செயலாளர்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு எதிர்காலத்தில் மன்னார் மாவட்டத்தில் இயங்கும் அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், மற்றும் பாடசாலைகள் அனைத்தும் இவ்வுற்பத்தித்திறன் மேம்பாட்டு செயற்திட்டத்தில் இணைவதோடு தேசிய அளவில் விருதுகள் பெறுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.



மன்னார் நகர பிரதேச செயலகம்
2ம் இடம்



நானாட்டான் பிரதேச செயலகம்
3ம் இடம்



மடு பிரதேச செயலகம்
4ம் இடம்

### 5.1.5. தேர்தல்கள் திணைக்களச் செயற்பாடுகள்

2014ம் ஆண்டிற்கான வாக்காளர் கணக்கெடுப்பு பணிகள் இம்மாவட்டத்தின் 153 கிராம அலுவலர் பிரிவுகளில் கணக்கெடுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வாக்காளர் இடாப்பு மீளாய்வு பணி 20.04.2014இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பணியின் செயலாற்றுகை பற்றி ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் போதனா வகுப்புக்கள் நடாத்தப்பட்டதை தொடர்ந்து 2014ம் ஆண்டிற்கான வாக்காளர் கணக்கெடுப்பிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்பொழுது இறப்பெய்தியோர், வதிவிடமாற்றம் போன்ற காரணங்களின் நிமித்தம் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களது சுற்றுநிருபத்திற்கிணங்க நீக்கப்பட்டு 18வயது பூர்த்தியானோர், புதிதாக வதிவிற்கு வந்தோர் மற்றும் நடைமுறை இடாப்பில் உள்ளோர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து உதவிப் பதிவு அலுவலரது மேற்பார்வையின்கீழ் இரு வாக்கெடுப்பு பிரிவு உத்தியோகத்தர்களது பரிசீலனையின்பின் தயாரிக்கப்பட்டு உள்ளீர்க்கப்பட்டோரின் பெயர் “ ஆ” பட்டியலிலும் நீக்கப்பட்டோர் பெயர் “ அ” பட்டியலிலும் தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

மேலும் குறித்த காலத்தில் பதிவு செய்வதற்கு தவறியோருக்காக மீண்டுமொரு சந்தர்ப்பம் ஒக்ரோபர் மாதத்தில் உரிமைக் கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்டு உரியோருக்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தகுதியானவர்கள் உள்ளீர்க்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஒக்ரோபர் மாதம் 31ம் திகதி 2014ம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு உதவிப் பதிவு அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் பிரகாரம் 2014ம் ஆண்டிறகான மொத்த வாக்காளர் எண்ணிக்கை 79,232 ஆகும்

மேலும் 2015ம் ஆண்டில் இடம்பெறவுள்ள சனாதிபதி தேர்தலின் பொருட்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் முன்னேற்பாட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2015.01.08ம் திகதி 70 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடாத்தப்பட்டதுடன் 06 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டு வாக்கெண்ணும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இம்மாவட்டத்தின் சகல அரசாங்க ஊழியர்களினது பங்களிப்புடன் அரசாங்க அதிபரின் வழிநடத்துதலின் கீழ் குறிப்பிட்ட தேர்தல் சிறப்பாக நடைபெறுவதற்கு இத்திணைக்களம் பூரண பங்காற்றியிருந்ததென்பதனை இதன்முலம் அறியத்தருகின்றேன்.

### 5.1.6. பதிவாளர் நாயகத் திணைக்கள செயற்பாடுகள்

1. பதிவிற்காக பெறப்பட்ட உறுதிகளின் எண்ணிக்கை - 4,855
2. பெறப்பட்ட உறுதிகளின் இணைப்பிரதிகளின் எண்ணிக்கை - 4,115
3. பிரதிகளினை பெற்றுக்கொள்வதற்கு பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை
   - i. காணிப்பதிவேட்டுத்தாள் - 3,033
   - ii. உறுதிப்பிரதி - 1,232
4. ஆவணங்கள் தேடுவதற்காக பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை
   - i. காணிபுத்தகங்கள் - 19
   - ii. உறுதிகள் மற்றும் வேறு ஆவணங்கள் - 26
5. அறவிடப்பட்ட கட்டணங்களின் அளவு
   - i. பதிவுக்கட்டணங்கள்
     - a. உறுதிகள் மற்றும் வேறு ஆவணங்கள் - 515,200.00
   - ii. ஆவணதேடுதலுக்கான கட்டணங்கள்
     - a. காணிபுத்தகங்கள் - 9,500.00
     - b. உறுதிகள் மற்றும் வேறு ஆவணங்கள் - 13,000.00
   - iii. இணைப்பிரதிகளில் ஒட்டப்பட்ட முத்திரைகள்
     - a. உறுதிகள் மற்றும் வேறு ஆவணங்கள் - 18,317,333.00
   - iv. வேறு
     - a. முத்திரைவரிச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட குறைகள் - 00
     - b. முத்திரைவரிச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட தண்டப்பணம் - 53,042.00

**சிவில் பதிவு**

1. பதிவு செய்யப்பட்ட விவாகங்களின் எண்ணிக்கை - 87
2. அனுமதிக்கப்பட்ட பிரதிக்கினைப் பத்திரங்களின் எண்ணிக்கை (24ம் பிரிவு) - 83
3. வழங்கப்பட்ட அனுமானவயதுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை - 34
4. விவாக பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் அனுமான வயதுச் சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக்கொள்ளல்
   - i. பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை - 1,458
   - ii. அறவிடப்பட்ட முத்திரை கட்டணங்கள் - 212,000.00
   - iii. வழங்கப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை - 2,247
5. விவாக பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மொழிபெயர்ப்பு
   - i. மொழிபெயர்ப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 144
   - ii. வழங்கப்பட்ட மொழிபெயர்ப்பு பிரதிகளின் எண்ணிக்கை - 175
   - iii. மொழிபெயர்ப்புகளின் மீது அறவிடப்பட்ட முத்திரைக் கட்டணங்கள் - 87,500.00

### 5.1.7.அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் - மன்னார்

| செயற்திட்டம் | ஒதுக்கீடு 2014 | செலவுகள் 2014 |
|---|---|---|
| அனர்த்த முகாமைத்துவ பயிற்சி மற்றும் விழிப்புணர்வுகள் | 283,000.00 | 257,956.00 |
| அனர்த்த திட்டமிடல் மற்றும் தயார்படுத்தல் | 312,000.00 | 284,607.00 |
| அனர்த்த குறைப்பு செயற்திட்டம் | 29,078,384.45 | 9,434,780.79 |






தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

| செயற்திட்டம் | ஒதுக்கீடு 2014 | செலவுகள் 2014 |
|---|---|---|
| குடிநீர் விநியோகம் - வரட்சி | 4,830,000.00 | 4,830,000.00 |
| நீர்தாங்கி கொள்வனவு | 1,056,332.50 | 1,008,000.00 |
| வெள்ள நிராவணம் | 17,700,000.00 | 17,700,000.00 |
| உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தல் | 5,000,000.00 | 3,208,594.00 |
| வீடழிவு நிவாரணம் | 100,239,000.00 | 99,375,000.00 |
| அனர்த்ததிற்கு தாக்குபிடிக்க கூடிய வீடமைப்புதிட்டம் | 3,000,000.00 | 2,200,000.00 |
| அனர்த்தங்களினால் ஏற்பட்ட மரணங்கள் மற்றும் காயமடைந்தவர்களுகான கொடுப்பனவு | 80,000.00 | 80,000.00 |





## 5.1.8.மோட்டார் போக்குவரத்து திணைக்களச் செயற்பாடுகள்

| தொ.இல | மாதம் | புதிய விண்ணப்பம் | புதுப்பித்த விண்ணப்பம் | தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பம் | கிடைக்கப் பெற்ற இலக்கத் தகடுகள் | விநியோகிக்கப்பட்ட இலக்கத் தகடுகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தை | 205 | 11 | 161 | 22 | 8 |
| 2 | மாசி | 185 | 10 | 257 | 24 | 21 |
| 3 | பங்குனி | 228 | 11 | 219 | 24 | 14 |
| 4 | சித்திரை | 102 | 7 | 95 | 22 | 21 |
| 5 | வைகாசி | 159 | 8 | 122 | 18 | 22 |
| 6 | ஆனி | 137 | 11 | - | 42 | 13 |
| 7 | ஆடி | 148 | 11 | 304 | 19 | 25 |
| 8 | ஆவணி | 118 | 25 | 120 | 14 | 16 |
| 9 | புரட்டாதி | 446 | 32 | 268 | 16 | 18 |
| 10 | ஐப்பசி | 175 | 23 | 135 | 28 | 26 |
| 11 | கார்த்திகை | 199 | 2 | 74 | 45 | 28 |
| 12 | மார்கழி | 191 | 22 | 140 | 11 | 11 |
| **மொத்தம்** | | **2,293** | **173** | **1,041** | **285** | **223** |





## 5.1.9.ஓய்வூதியச் செயற்பாடுகள்

| ஓய்வூதிய வகை | மன்னார் நகரம் | | நானாட்டான் | | முசலி | | மடு | | மாந்தை மேற்கு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி |
| குடிசார் | 564 | 115,655,710.89 | 135 | 30,539,347.72 | 26 | 5,782,659.68 | 32 | 5,489,456.52 | 37 | 7,006,337.95 | 794 | 164,473,512.76 |
| விதவைகள் | 258 | 61,641,941.74 | 69 | 13,305,453.73 | 9 | 1,745,861.62 | 11 | 2,017,505.76 | 24 | 3,444,103.32 | 371 | 82,154,866.17 |
| அநாதைகள் | 0 | - | 2 | 84,764.08 | 0 | - | 0 | - | 0 | - | 2 | 84,764.08 |
| ஊனமுற்றோர் | 6 | 1,032,817.80 | 0 | - | 0 | - | 0 | - | 0 | - | 6 | 1,032,817.80 |
| படையினர் | 1 | 16,576.28 | 0 | - | 0 | - | 0 | - | 0 | - | 1 | 16,576.28 |
| வெளிநாடு | 0 | - | 20 | 727,871.45 | 0 | - | 0 | - | 0 | - | 20 | 727,871.45 |
| உள்ளூராட்சி ஓய்வூதியம் | | | | | | | | | | | | |
| குடிசார் | 14 | 2,435,172.00 | 0 | - | 0 | - | 0 | - | 0 | - | 14 | 2,435,172.00 |
| விதவைகள் | 15 | 2,376,827.68 | 0 | - | 0 | - | 0 | - | 0 | - | 15 | 2,376,827.68 |
| | | | | | | | | | | | | |
| மொத்தம் | **858** | **183,159,046.39** | **226** | **44,657,436.98** | **35** | **7,528,521.30** | **43** | **7,506,962.28** | **61** | **10,450,441.27** | **1223** | **253,302,408.22** |

### 5.1.10. தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களச் செயற்பாடுகள்

இந்த நாட்டின் சமூக பொருளாதார நிலைமைகள் சம்பந்தமாக புள்ளிவிபரத்தரவுகளைச் சேகரித்தல், வகைப்படுத்தல், ஆய்வுசெய்தல், வெளியிடல், புள்ளிவிபர குறிகாட்டிகளை கணித்தல் ஆகிய பணிகள் மத்திய அரசாங்க முகவர் நிலையமான தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களத்தைச் சார்ந்தது. அரசாங்கத்தின் தேசிய திட்டமிடல், கொள்கை வகுத்தல் போன்றவற்றிக்கும் இவற்றின் முன்னேற்றங்களை மதிப்பிடல் போன்றவற்றிக்கும் தேவையான தகவல்கள் வழங்கி வருகின்றது. சேகரிக்கப்பட்ட இத்தரவுகள் சனத்தொகை, விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், விலைகள், தேசிய வருமானம் போன்ற பல விடயங்களை உள்ளடக்குகின்றது. மாவட்ட புள்ளிவிபரக்கிளையால் 2014ம் ஆண்டு செய்யப்பட்ட புள்ளிவிபர வேலைகள் கீழே தரப்படுகின்றது.

**1. பொருளாதாரத்தொகைமதிப்பு 2013/14**

இத்தொகைமதிப்பு நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டது.

1. மாவட்டத்தில் உள்ள சகல பெருந்தோட்டங்களையும் நிரற்படுத்துதல்.
2. கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து கூறுகளையும் நிரற்படுத்தல்.
3. சிறுநில விவசாயக்கூறுகளை நிரற்படுத்தல், தரவுசேகரித்தல் மற்றும் பெருந்தோட்டங்களின் தரவுகளைச் சேகரித்தல்.
4. நிரற்படுத்தப்பட்ட கைத்தொழில் வர்த்தகம் மற்றும் சேவைகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கூறுகளில் தெரிவு செய்யப்பட்ட மாதிரி கூறுகளில் விரிவான தகவல் சேகரித்தல்.

**2. இலங்கைத் தொழிற்பல அளவீடு**

இலங்கைத் தொழிற்பல அளவீடானது காலாண்டு தோறும் தொடர்ச்சியாக நடத்தப்படும் ஓர் அளவீடாகும். இது நாட்டின் தற்போதைய தொழிற்பல நிலைகளை அளவிடவும் காலாண்டிற்கு காலாண்டு ஏற்படும் மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு நடத்தப்படுகின்றது.

**3. நெல் விளைச்சல் மதிப்பீட்டு அளவீடு**

சராசரி நெல் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்காக மாவட்ட ரீதியிலும், நாடளாவிய ரீதியிலும் நெல் விளைச்சலின் மதிப்பீட்டை அளவிடும் பொருட்டு ஆண்டுக்கு இரு முறை நெல் விளைச்சல் மதிப்பீட்டு அளவீடு நடத்தப்படுகின்றது.

**4. கைத்தொழில் வருடாந்த அளவீடு**

இவ் அளவீடு சுரங்கமறுத்தல், கற்பார் தோண்டல், உற்பத்திக் கைத்தொழில், மின்சாரம், வாயு, நீர் விநியோகம் சம்பந்தமாக பொருளாதார முயற்சிகள் உள்ளடங்குகின்றது.

**5. நிர்மாணக் கைத்தொழில் அளவீடு**

நிர்மானக் கைத்தொழில் சம்பந்தமான அடிப்படைத் தகவல்களை திரட்டும் பொருட்டு ஒரு தொடர்ச்சியான நிகழ்வாக இவ் அளவீடு வருடாந்தம் நடத்தப்படுகின்றது.

**6. நெற்புள்ளிவிபரம்**

ஒரு தொடர்ச்சியான நிகழ்வாக மாவட்டத்திலுள்ள சகல வயல் நிலங்களையும் கண்டறிதல் மற்றும் விதைக்கப்பட்ட, அறுவடை செய்யப்பட்ட நெற்செய்கையின் விஸ்தீரணத்தை சேகரித்தல் வருடாந்தம் நடத்தப்படுகின்றது.

**7. மேட்டு நிலப்பயிர்ச்செய்கை**

பருவகாலப் பயிர்கள், நிரந்தர மற்றும் ஓரளவு நிரந்தர பயிர்களும் அவை பயிரிடப்பட்ட விஸ்தீரணம், உற்பத்தியின் அளவு என்பன சேகரிக்கப்பட்டது.

**8. கால்நடைப்புள்ளிவிபரம்**

மாவட்ட ரீதியில் கால்நடைகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிபரமும் அவற்றின் உற்பத்திகள் பற்றிய புள்ளிவிபரமும் சேகரிக்கப்படுகின்றது. அத்துடன் அனுமதி பெற்ற அறுவை நிலையங்களில் அறுக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கையும் சேகரிக்கப்பட்டது.

**9. சில்லறை, உற்பத்தி விலைகள் புள்ளிவிபரம்**

உணவுப்பொருட்களினதும் நானவீதப்பொருட்களினதும் விலைகள் மாவட்டத்தில் வாராந்த, மாதாந்த, வருடாந்த அடிப்படையில் சேகரிக்கப்பட்டது. அத்துடன் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலைகளும் மாதாந்தம் சேகரிக்கப்பட்டது.

**10. உள்ளுராட்சிபுள்ளிவிபரம்**

மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளில் வருமானம், செலவு, அவர்களால் வழங்கப்படும் சேவைகள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டது.

### 5.1.11. நிர்வாகக்கிளையின் செயற்பாடுகள்

இம்மாவட்ட நிர்வாகம் மன்னார் நகரம், நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்த 05 பிரதேச செயலக பிரிவுகளும் பிரதேச செயலகங்களாக இயங்கிக்கொண்டுவருகின்றன. பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 03 (மன்னார் நகரம், நானாட்டான், மாந்தை மேற்கு) பிரதேச செயலாளர்கள் வகுப்பு I ற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

மாவட்டச்செயலகம், பிரதேச செயலகங்களில் உள்ள அரச முகாமை உதவியாளர் சேவைக்குரிய தரத்தில் 132 அனுமதிக்கப்பட்ட ஆளணிகள் இருந்தபோதிலும் 36 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அத்துடன் பொதுநிர்வாக அமைச்சின் கீழ் புதிதாக 15 பட்டதாரிகள் பட்டதாரிப்பயிலுனர்களாக பல்வேறு அமைச்சின் கீழ் இணைப்புச்செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலகங்கள் மூலம் பொது மக்களுக்கு தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்காக 3647 விண்ணப்பங்கள் ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு, உரிய முறையில் பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப்படுகின்றன.

2014ம் ஆண்டில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மூலம் மன்னார் மாவட்டச்செயலகத்திற்கு புதிய பட்டதாரிகள் அவர்களது பாடத்துறைக்கு ஏற்றவாறு பின்வரும் திணைக்களங்கள் / அமைச்சுக்ககளுக்கு பட்டதாரிப்பயிலுனர்களாக கடமை இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

**பட்டதாரிப்பயிலுனர்களின் நிலவரத்தொகுப்பு**

| இல | அமைச்சு / திணைக்களம் | பட்டதாரிப் பயிலுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 02 |
| 02 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சு | 06 |
| 03 | சமூகசேவைகள் அமைச்சு | 01 |
| 04 | உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சு | 01 |
| 05 | சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் | 02 |
| 06 | கல்வி அமைச்சு | 02 |
| 07 | அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 01 |
| **மொத்தம்** | | **15** |

**2014 வரவு செலவு திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்**
**அரச வெளிக்கள ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர் வழங்கல்**

2014 வரவு செலவு திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் வகையில் மன்னார் மாவட்டத்தில் 591 ஆண் உத்தியோகத்தர்களுக்கும், 146 பெண் உத்தியோகத்தர்களுக்கும் மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது.





## 5.1.12.தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயற்பாடுகள்

| தொ. இல | விடயம் | நிதி ஒதுக்கீடு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 01 | தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான செயலமர்வு 29.05.2015இல் நடாத்தப்பட்டது | 115,500.00 | 85,585.00 | 29,915.00 |
| 02 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் மாவட்டத்தில் 09.07.2014 இல் பட்டத் திருவிழா நடாத்தப்பட்டது | 370,000.00 | 273,424.38 | 96,575.62 |
| 03 | சமூக ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வீதி நாடகம் 17.07.2014 இல் நடாத்தப்பட்டது | 50,000.00 | 46,518.40 | 3,481.60 |
| 04 | கொத்தணி வீடமைப்புத் திட்டத்தில் வடிகாலமைப்பை ஏற்படுத்தல் | 150,000.00 | 150,000.00 | 0 |
| 05 | புதிதாக உருவாக்கப்பட்ட கிராமத்தில் உள்ளக வீதி அமைத்தல்- காயாக்குளி, கொண்டச்சி | 150,000.00 | 150,000.00 | 0 |
| 06 | காகிதாதிகள் | 7,500.00 | 7,500.00 | 0 |
| | **மொத்தம்** | **843,000.00** | **713,027.78** | **129,972.22** |

## 5.1.13.தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் செயற்பாடுகள்

தகவல் தொழில்நுட்பப் பூங்காவானது தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. 2014 ஆம் ஆண்டிற்கான அமைச்சினால் விடுவிக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.4,065,000.00. 2014 ஆம் ஆண்டு கணனி பயிற்சி மற்றும் ஏனைய சேவைகளினால் பெறப்பட்ட வருமான விபரம் பின்வருமாறு

| வருமானம் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | கணனி பயிற்சி நெறியினால் | கணனி பழுது பார்தல் பராமரித்தல் | ஏனைய வருமானம் | மொத்தம் | குறிப்பு |
| 2014 | 513,700.00 | 45,700.00 | 50,263.50 | 609,663.50 | அனைத்து வருமானங்களும் அரசாங்க வருமான தலைப்பின் கீழ் வைப்பிலிடப்பட்டது. |

கணனி பயிற்சி நெறியில் மொத்தமாக 173 மாணவர்கள் பயிற்சி நெறியை நிறைவு செய்துள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. விபரம் பின்வருமாறு

| இல | பயிற்சி நெறியின் பெயர் | மாணவர்களின் தொகை | மொத்த மாணவர்கள் 2014 |
|---|---|---|---|
| 01. | **Diploma in Microsoft Office 2013**<br>பிரிவு 39<br>பிரிவு 40<br>பிரிவு 41 | 53<br>27<br>06 | 86 |
| 02. | **Diploma in PC Hardware**<br>பிரிவு 19<br>பிரிவு 20 | 11<br>03 | 14 |
| 03. | **Diploma in Graphics Designing**<br>பிரிவு 17<br>பிரிவு 18 | 07<br>02 | 09 |
| 04. | **Diploma in Web Designing**<br>பிரிவு 03<br>பிரிவு 04 | 11<br>05 | 16 |
| 05. | **Certificate in Internet & E-mail**<br>பிரிவு 18 | 05 | 05 |
| 06. | **Information Technology Computer Educational Programme (ICEP)**<br>பிரிவு 02 | 07 | 07 |
| 07. | **ICT O/L** | 05 | 05 |
| 08. | **Student Training Funded by world vision** | 11 | 11 |
| 09. | **Teachers Training Funded by world vision** | 20 | 20 |
| மொத்தம் | | | **173** |





## 5.2.கலாச்சார மற்றும் சமூக சேவை

### 5.2.1.கலாச்சார மற்றும் சமயச் செயற்பாடுகள்

- **தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்வு.**

மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள், மன்னார் மாவட்ட திணைக்களங்கள், மற்றும் இலங்கை முப்படையினர் இணைந்து நடாத்திய மாபெரும் தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்வானது 05.04.2014ம் திகதி மன்/முருங்கன் மகா வித்தியாலயம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இதில் பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் கலைநிகழ்வுகள் என்பன நிகழ்த்தப்பட்டன.






- **அரச சிறுவர் நாடக விழா**

கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை கலைக்கழகத்தின் அரச நாடகக்குழு ஒன்றிணைந்து வருடா வருடம் ஏற்பாடு செய்கின்ற அரச நாடக விழாவிற்கான போட்டிகள் 24.07.2014 ம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. இதில் மன்/சின்ன பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலையானது தேசிய மட்டத்தில் பரிசினையும் பெற்றுக்கொண்டது.

- **அரச சிறுவர் ஓவிய விழா**

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களமும் அரச ஓவியம் மற்றும் சிற்பகுழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யும் அரச சிறுவர் ஓவிய விழா 2014 ற்கான போட்டிகள் மன்/ சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலையில் 22.09.2014 ம் திகதி நடாத்தப்பட்டன. இப்போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்டன.

- **மாவட்ட கலை விழா**

இக் கலை விழாவானது மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 23.10.2014 ம் திகதி நானாட்டான் பிரதேச கலாசார மண்டபத்தில் மாவட்ட செயலாளர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ரூபா 25,000 நிதி அனுசரணையுடனும், மாவட்ட செயலகமும் இணைந்து இவ் விழாவானது நிகழ்த்தப்பட்டது.




- **அரச நடன விழா.**

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை கலைக்கழகத்தின் அரச நடனக்குழு அரச நாட்டியக்குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்கின்ற அரச நடன விழா – 2014 ற்கான போட்டிகள் 27.10.2014 ம் திகதி மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வானது பாடசாலை மற்றும் திறந்த மட்டத்தில் நடைபெற்றது . இதில் மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை, மன்/ பெரிய மடு வித்தியாலயம், புனித கார்மேல் அன்னை கலாமன்றம் ஆகியன தேசிய மட்டத்தில் இடத்தினைப் பெற்றுக்கொண்டன.

- **மாற்றுத்திறனாளிக்களுக்கான அரச கலை விழா**

இக்கலை விழாவானது 29.12.2014ம் திகதி மன்னார் மாவட்ட செயலாளர் திரு.M.Y.S.தேசப்பிரிய அவர்கள் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ் கலை விழாவானது சமூகசேவைகள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இணைக் கருத்திட்டத்தின் கீழ் நாடகம், நடனம் இசை ஓவியம் போன்ற துறைகள் ஊடாக விசேட திறமையுள்ளோரின் திறமைகளினை சமூகத்திற்கு வெளிக் கொணரும் நோக்கில் ரூபா 50,000 நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிகழ்த்தப்பட்டது.




- **வடக்கு தெற்கு கலாச்சார மற்றும் விளையாட்டு பரிமாற்ற நிகழ்வு**

வடக்கு தெற்கு சமூக கலாச்சார உறவினை வளர்க்கும் முகமாக விளையாட்டு, இளைஞர் விவகார கிராம அபிவிருத்தி, கலாசார மற்றும் கலை விவகார, சமூக நலன்புரி, சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு சேவை, மகளிர் விவகார, கட்டிட பொருளாதார மேம்பாட்டு, வீடுகள் மற்றும் கட்டிட நிர்மாணத்துறைகள், மனித சக்தி மற்றும் தொழில் வாய்ப்பு அமைச்சுடன் (தென்மாகாணம்) மன்னார் மாவட்டச் செயலகமும் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்ட வடக்கு தெற்கு கலாச்சார மற்றும் விளையாட்டு பரிமாற்ற நிகழ்வானது 19,20,21 ம் திகதி டிசம்பர் மாதம் 2014 ம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றது. இதில் 80 பேர் கொண்ட தென்மாகாண இளைஞர் குழுவினர் எமது மாவட்டததிற்கு வருகை தந்து எமது இளைஞர்களுடன் தமது கலை கலாச்சாரம் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டனர்.






### 5.2.2. சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி செயற்பாடுகள்

**விழிப்புணர்வு கருத்தரங்கு**

**தேசிய போசணை மாதத்திற்கான மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு**

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் (கொழும்பு) அனுசரனையுடன் மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலரினால் 2014.06.26ம் திகதி மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் 100 மாணவ, மாணவிகளுக்கு நடாத்தப்பட்டது. வளவாளராக மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி கருத்துரை வழங்கினார்.



**தெளிவு படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்**

**" எமது வண்ணத்துப் பூச்சிகளின் இறக்கைகளைபலம் மிக்க தாக்குவோம்"**

இவ்நிகழ்ச்சி திட்டமானது மாவட்ட ரீதியாக முசலி பிரதேச செயலக பிரிவில் பெற்றோர்கள், முதியோர்களை மையமாக கொண்டு கூழான்குளம் கிராமத்தில் நடைபெற்றது. வளவாளராக முசலி சுகாதார வைத்திய அதிகாரி கலந்து கொண்டு சிறப்பித்தார்.



**சிறுவர் கழகங்களுக்கான மாவட்ட மட்டத்தில் நாடாத்தப்பட்ட குறும் நாடக போட்டி**

மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசசெயலகங்களிலும் உருவாக்கப்பட்ட சிறுவர் கழகங்கள் இடையிலான நாடக போட்டி மாவட்ட மட்டத்தில் 2014.11.16ம் திகதி ஞாயிற்று கிழமை உதவி மாவட்ட செயலாளர் தலைமையில் நடாத்தப்பட்டன. இவ்நிகழ்வு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. அதில் மடு பிரதேசசெயலகத்தின் தட்சனாமருதமடு இளம்சுடர் சிறுவர் கழகம் முதலாம் இடத்தையும், இரண்டாம் இடத்தை மாந்தை மேற்கு பிரதேசசெயலகத்தின் மூன்றாம் பிட்டி கிராமத்தின் செந்தளிர் சிறுவர் கழகமும், மூன்றாம் இடத்தை நானாட்டான் பிரதேசசெயலகத்தின் சுண்டிக்குழி கிராமத்தின் புனித அன்ரனிஸ் சிறுவர் கழகமும் வெற்றி பெற்றன. இதில் 1ம் இடம் பெற்ற மடு பிரதேசசெயலகத்தின் தட்சனாமருதமடு இளம்சுடர் சிறுவர் கழகம் தேசிய மட்ட நிகழ்வில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.





### 5.2.3.தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகள்

1. **MOH Programme (5) -** சுகாதார திணைக்கள அலுவலர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கான கருத்தமர்வு நடத்தப்பட்டது.
2. **Surakna Foster Care -** பெற்றோரை இழந்த **84** சிறுவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது – மாதாந்தம் **1,000/-** வீதம்.
3. **Angel Network** - சிறுவர் பாதுகாப்பு சம்மந்தமாக தேவதைகளின் வலையமைப்பு எமது மாவட்டத்தில் **25** வலையமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
4. **School Child Protection Committees** – பாடசாலைகளுக்கு **25** விழிப்புணர்வு கருத்தமர்வு நடத்தப்பட்டுள்ளது.
5. **மருத்தவ சான்றிதழ் பெற்று கொடுத்தல்-** சிறுவர் இல்ல சிறார்களுக்கு இலவச மருத்துவ சான்றிதழ் பெற்று கொடுக்கப்பட்டுள்ளது. (**05** சிறுவர் இல்லங்களுக்கு)
6. **Happy and Sad Box -** முதல் கட்டமாக **25** பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு உத்தியோகத்தர்களால் கண்காணிப்புச் செய்யப்பட்டது. இது சம்மந்தமாக பாடசாலை அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்களுக்கு கருத்தமர்வு நடத்தப்பட்டது.

### 5.2.4.சமூக சேவைகள் செயற்பாடுகள்

| இல | விடயம் | தொகை (ரூபா) | பயனாளிகள் |
|---|---|---|---|
| 01 | 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர் கொடுப்பனவு | 1,000 | 2,033 |
| 02 | சுயதொழில் கொடுப்பனவு(வடமாகாணம்) | 15,000 | 46 |
| 03 | வறிய நிலையிலுள்ள பாடசாலை செல்லும் பிள்ளைகளுடைய குடும்பங்களுக்கான சுயதொழில் கொடுப்பனவு | 36,000 | 23 |
| 04 | மாற்றாற்றலுடைய நபர்களுக்கான கொடுப்பனவு | 3,000 | 365 |
| 05 | புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு | 500-750 | 140 |
| 06 | TB | 250-300 | 22 |
| 07 | Leprosy | 250-500 | 05 |
| 08 | தலசிமியா | 500 | 16 |
| 09 | சிறு நீரகப்பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவு | 500 | 32 |
| 10 | PAMA | 250-500 | 5,259 |
| | **ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் வழங்கல்** | | |
| 11 | கண்ணாடி | | 46 |
| 12 | காதுகேட்கும் கருவி | | 07 |
| 13 | சக்கர நாற்காலி | | 03 |
| 14 | முச்சக்கரவண்டி | | 02 |







## 5.2.5.மாவட்ட விளையாட்டுப் பிரிவின் செயற்பாடுகள்

**நானாட்டான் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற**

**மன்னார் மாவட்ட விளையாட்டு விழா - 2014**



2014 – மன்னார் பிரதேச செயலக பிரிவு சகலதுறை சம்பியன் 1ம் இடம்



2014 – மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவு சகலதுறை சம்பியன் 2ம் இடம்



மன்னார் பிரதேச செயலக விளையாட்டு விழா




பரிசளிப்பு நிகழ்வுகள்



மடு பிரதேச செயலக விளையாட்டு விழா



பங்குபற்றுனர்களுடன் மடு பிரதேச செயலாளர்

## விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்
## கிறீடா சக்தி பயிற்சிகள்










## 5.3 அபிவிருத்தி செயற்பாடுகள்

### 5.3.1 பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழான மூலதன வேலைத்திட்டங்கள் -2014

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் (265-01-1-2104) கீழ் 2014 ஆம் ஆண்டுக்கான மூலதன வேலைத்திட்டத்திற்கு ரூபா 49,770,777/= ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்வரும் வேலைத்திட்டங்கள் ரூபா 49,585,826.63 செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| இல | வேலைத்திட்டம் | ஒதுக்கீட்டுத் தொகை | செலவினத் தொகை |
|---|---|---|---|
| | **தொடர் வேலைகள்** | | |
| 1 | சிரேஸ்ட பதவி நிலை அலுவலர்களுக்கான மூன்று மாடிக்கட்டிட விடுதி அமைத்தல் - நிலை III | 8,010,276.00 | 7,923,227.06 |
| 2 | இரண்டாம் நிலை அலுவலர்களுக்கான மூன்று மாடிக்கட்டிட விடுதி அமைத்தல - நிலை V | 8,244,993.00 | 8,252,478.24 |
| 3 | சுற்றுலா விடுதிக்கான இரண்டு மாடிக்கட்டிடம் அமைத்தல் - நிலை III | 8,515,509.00 | 8,339,586,.13 |
| | **புதிய வேலைகள்** | | |
| | மாவட்ட செயலக புதிய கட்டிடம் அமைத்தல் | 25,000,000 | 25,070,535.20 |
| | **மொத்தம்** | **49,770,777.00** | **49,585,826.63** |

**சிரேஸ்ட பதவி நிலை அலுவலர்களுக்கான மூன்று மாடிக்கட்டிட விடுதி அமைத்தல் - நிலை III**





இரண்டாம் நிலை அலுவலர்களுக்கான மூன்று மாடிக்கட்டிட விடுதி அமைத்தல் - நிலை V



சுற்றுலா விடுதிக்கான இரண்டு மாடிக்கட்டிடம் அமைத்தல் - நிலை III



மாவட்ட செயலக புதிய கட்டிடம் அமைத்தல்














**பயிற்சி நெறிகள்**

**1.பயிற்சிகளும் இயலளவு மேம்படுத்துகையும்**

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் **2014**ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறியும், இயலளவு மேம்படுத்துகையும் என்ற தலைப்பின் கீழ் ரூபா 450,000/= ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்வரும் பயிற்சி நெறிகள் எமது மாவட்ட செயலக திறன் விருத்தி அலகில் நடாத்தப்பட்டன. இப் பயிற்சி நெறிக்காக ரூபா 425,745.72 செலவு செய்யப்பட்டன.

| இல | பயிற்சி நெறி | பங்கு பற்றியவர்கள் விபரம் | பயிற்சிக் காலம் | பங்கு பற்றியவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சாரதிகளுக்கான தொழில் நுட்ப விழிப்புணர்வு பயிற்சி | மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக சாரதிகள் | (1 நாள்) மே 7 | 25 நபர்கள் |
| 2 | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிநடைமுறைகள் | மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் | (4 நாட்கள்) ஜூன் - 09, 16,23 & 30 | 33 நபர்கள் |
| 3 | அலுவலகப்பணியாளர் மற்றும் சாரதிகளுக்கான விழிப்புணர்வு பயிற்சி | மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அலுவலகப்பணியாளர் மற்றம் சாரதிகள் | (2 நாட்கள்) ஜூன் - 10 &17 | 31 நபர்கள் |
| 4 | ஓய்வூதிய பயிற்சி | மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக கணக்காளர்கள் மற்றும் முகாமை உதவியாளர்கள் | (1 நாள்) ஜூலை 30 | 16 நபர்கள் |
| 5 | வரவேற்பு பணியாளர்களுக்கான பயிற்சி (Front Desk Challenges) | அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமை உதவியாளர்கள் | (1 நாள்) ஜூலை 4 | 20 நபர்கள் |
| 6 | NEW CIGAS | மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக கணக்காளர்கள் மற்றும் முகாமை உதவியாளர்கள் | (3 நாட்கள்) ஜூலை - 24,25 & 26 | 23 நபர்கள் |

**2. SLIDA – பயிற்சி**

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் SLIDA **2014** ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள்

| இல | பயிற்சி நெறி | பங்கு பற்றியவர்கள் விபரம் | பயிற்சிக் காலம் | பங்கு பற்றியவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | புதிதாக இணைக்கப்பட்ட முகாமை உதவியாளர்களுக்கான அறிமுகப்பயிற்சி | மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக புதிய முகாமை உதவியாளர்கள் | (10 நாட்கள்) 05.06.2014– 20.6.2014 | 08 நபர்கள் |
| 2 | புதிதாக இணைக்கப்பட்ட கிராம அலுவலர்களுக்கான அறிமுகப்பயிற்சி -1ஆம் சுற்று | புதிய கிராம அலுவலர்கள் | (10 நாட்கள்) 10.03.2014– 21.03.2014 | 29 நபர்கள் |
| 3 | புதிதாக இணைக்கப்பட்ட கிராம அலுவலர்களுக்கான் அறிமுகப்பயிற்சி -2ஆம் சுற்று | புதிய கிராம அலுவலர்கள் | (10 நாட்கள்) 10.06.2014– 29.10.2014 | 07 நபர்கள் |

### 5.3.2 கிராம அபிவிருத்தி திணைக்கள செயற்பாடுகள்

**கிராம/மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள்**

மன்னார் மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக 233 கிராம அபிவிருத்திச் சங்கங்களும 287 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் வெகுசிறப்பாக இயங்கி வருகின்றது. இச்சங்கங்களின் அங்கத்தவர்கள் அக்கிராமங்களை சேர்ந்த மக்களே. இச்சங்கங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் அந்தந்த கிராமத்தின் சமூக பொருளாதார கலாச்சார அபிவிருத்தியை மேற்கொள்வதற்காகவே

| தொ. இல | பிரதேச செயலகப் பிரிவு | கி.அ. சங்கங்கள் | மா. கி. அ சங்கங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | மன்னார் நகரம் | 78 | 66 | 144 |
| 02 | நானாட்டான் | 54 | 53 | 107 |
| 03 | மாந்தை மேற்கு | 51 | 56 | 107 |
| 04 | மடு | 19 | 18 | 37 |
| 05 | முசலி | 31 | 16 | 47 |
| | **மொத்தம்** | **233** | **149** | **382** |

கிராம அபிவிருத்தி சங்கங்களும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களும் பின்வரும் அபிவிருத்தித் திட்டங்களையும் சமூக நலத்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

- கிராமங்களின் பிரதி நிதியாக செயற்படல்
- கிராமங்களின் தேவைகள் பிரச்சினைகளை உரிய இடங்களுக்கு தெரியப்படுத்தி தீர்வினை பெற வழி வகுத்தல்.
- கிராமத்தினை முழுமையாக உள்ளடக்கிய வகையில் சிரமதானங்கள் மேற்கொள்ளல்
- வறிய குடும்பங்களை தெரிவு செய்து தொழில் வாயப்புக்களை ஏற்படுத்தி தொடுத்து வாழ்வாதாரத்தை முன்னேற்ற வழிவகுத்தல்
- சுழற்சி கடன் திட்டங்களை ஏற்படுத்தி பொருளாதார முன்னேற்றத்தை எற்றடுத்தல்
- சிறு சேமிப்பை ஊக்குவித்தல்
- கிராமங்களில் முன்பள்ளிகளை நடாத்தி மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பை ஏற்படுத்தல்.
- அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து திட்டங்கள் நிறைவேற உழைத்தல்

**சுயதொழில் முயற்சி சுழற்சி முறைக் கடன் திட்டங்கள்.**

கிராம மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் சுயதொழில் முயற்சி சுழற்சி முறைக்கடன் திட்டங்கள் அரச, அரச சார்பற்ற நிறுவன நிதி வழங்கலுடன் கி.சங்கம் மா.கி.அ.சங்கங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

| தொ.இல | பிரதேச செயலகப் பிரிவு | வழங்கப்பட்ட நிதி | தற்போதுள்ள நிதி |
|---|---|---|---|
| 01 | மன்னார் நகரம் | 31,522,755.00 | 55,128,198.69 |
| 02 | நானாட்டான் | 39,866,712.00 | 76,117,634.74 |
| 03 | மாந்தை மேற்கு | 14,121,000.00 | 17,871,000.00 |
| 04 | மடு | - | 5,901,050.00 |
| 05 | முசலி | 6,550,000.00 | 8,875,000.00 |
| | **மொத்தம்** | **92,060,467.60** | **163,892,883.43** |

## அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

ஒவ்வவொரு வருடத்திற்குமான மாகாண விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழான வேலைத்திட்டங்கள் எமது தினைகளத்தால் 05 பிரதேச செயலக பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. PSDG திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவுகளிலும் உள்ள பயனாளிகளுக்கும் 5 தையல் இயந்திரம் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

| தொ.இல | வேலைத்திட்டம் | கிராமம் | நிதிமூலம் | தொகை |
|---|---|---|---|---|
| முசலி | 84 அரை நிரந்தர வீடுகள் அமைத்தல் | முள்ளிக்குளம் | கிராம அபிவிருத்தி திணைக்களம் | 4,704,000.00 |
| | 26 நிரந்தர வீடுகள் திருத்தம் | முள்ளிக்குளம் | கிராம அபிவிருத்தி திணைக்களம் | 162,000.00 |
| | பொது நோக்கு மண்டபம் அமைத்தல் | முசலி | UN -HABITAT | 3,012,000.00 |
| | குழாய்க்கிணறு அமைத்தல் | பாலைக்குழி | - | 425,000.00 |
| | திறந்த குடிநீர்க்கிணறு அமைத்தல் | கூழாங்குளம் தம்பட்டமுசலி அகத்திமுறிப்பு | UN -HABITAT | 450,000.00 |
| | முன்பள்ளிக்கட்டடம் அமைத்தல் | குரடிக்குழி<br>பாலைக்குழி<br>கூழாங்குளம் | UN –HABITAT<br>UN –HABITAT<br>UN - HABITAT | 3,061,000.00<br>3,061,000.00<br>3,061,000.00 |
| | கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம் | மருதமடு | | 98,000.00 |
| நானாட்டான் | கூட்டுப்பசளை தயாரிப்பு | - | ACTED | - |
| | விவசாயக் கிணறு அமைத்தல் | - | - | - |
| மடு | கிராம அபிவிருத்திச் சங்க கட்டட திருத்தம் | பெரிய பண்டிவிரிச்சான் கிழக்கு | கிராம அபிவிருத்தி திணைக்களம் | 500,000.00 |
| | சமையல் பாத்திரங்கள் வழங்கல் | பூசாரிகுளம்,இரணை இலுப்பக்குளம் | கிராம அபிவிருத்தி திணைக்களம் | |
| மன்னார் நகரம் | அரைக்கும் ஆலை | பனங்கட்டிக்கொட்டு கிழக்கு மா.கி.அ.ச | கிராம அபிவிருத்தி திணைக்களம் | 2,000,000.00 |
| | அரைக்கும் ஆலை | பேசாலை முருகன் கோவிலடி மா.கி.அ.சங்கம் | கிராம அபிவிருத்தி திணைக்களம் | 2,000,000.00 |
| | வாடகைக்கு வழங்குவதற்கான சமையல் பாத்திரங்கள் வழங்கல் | எருக்கலம்பிட்டி மத்தி கி.அ.சங்கம் | கிராம அபிவிருத்தி திணைக்களம் | 200,000.00 |
| | தளபாடம் வழங்கல் (மா.கி.அ.சங்கம்) | தலைமன்னார் ஸ்ரேசன் மா.கி.அ.சங்கம் பனங்கட்டிக்கொட்டு மேற்கு மா.கி.அ.சங்கம் | கிராம அபிவிருத்தி திணைக்களம் | 100,000.00 |
| | ஒலிபெருக்கி சாதனம் வழங்கல் | மாந்தை கி.அ.சங்கம் | கிராம அபிவிருத்தி திணைக்களம் | 100,000.00 |
| மாந்தை மேற்கு | மின் இணைப்பு வழங்கல் | தேத்தாதவாடி கிராம அபிவிருத்தி சங்கம் | கிராம அபிவிருத்தி திணைக்களம. | 42,000.00 |
| | அரைக்கும் ஆலை | பாலியாறு கிராம அபிவிருத்திச் சங்கம் | கிராம அபிவிருத்தி திணைக்களம. | 2,000,000.00 |
| | மாதர் கிராம அபிவிருத்தி சங்க கட்டட திருத்தம் | புதுக்குளம் | கிராம அபிவிருத்தி திணைக்களம. | 500,000.00 |
| | குழாய் கிணறு அமைத்தல் | ஆண்டான்குளம் தையல் பயிற்சி நிலையம் | கிராம அபிவிருத்தி திணைக்களம. | 75,000.00 |

**மகளிர் அபிவிருத்தி நிலையம்**

பெண்களுக்கான சுயதொழிலை உருவாக்கும் நோக்கத்தோடு கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் வருடம் தோறும் மேற்படி பயிற்சி நெறியின் மூலம் பெண்கள் தமது தொழில்சார் திறன்களை விருத்தி செய்து அதன் மூலம் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வருமானம் ஈட்டக்கூடியதாகவும் உள்ளது. மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 05 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஒவ்வொரு மகளிர் அபிவிருத்தி நிலையங்கள் உள்ளது.

இப்பயிற்சி நெறிகள் இரு பிரதான பிரிவாக பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

01. ஆடை வடிவமைத்தலும் கைவேலைகளுக்குமான பயிற்சி -06 மாதம்
02. மணைப் பொருளியலும் அழகுக்கலையும் -03 மாதம்

சராசரியாக ஒவ்வொரு பயிற்சி நெறியிலும் 20 பேர் வரை கற்று வருகின்றனர். இவர்களுக்கான கொடுப்பனவு வரவின் அடிப்படையில் நாளொன்றுக்கு 100 வீதம் வழங்கப்படுகின்றது. இப்பயிற்சியின் போது உருவாக்கப்பபடும் பொருட்கள் பிரதேச மட்ட மாவட்ட மட்ட கண்காட்சிகளில் வைக்கப்பட்டு தெரிவு செய்யப்படுபவை மாகாணமட்டத்திற்கும் கொண்டு செல்லப்படும்.

**பிரதேச மட்ட / மாவட்ட மட்ட கண்காட்சி**

பிரதேச மட்டங்களில் நடாத்தப்படும் கண்காட்சிகளை தொடர்ந்து அவற்றில் சிறந்தவற்றை தெரிவு செய்து மாவட்ட மட்டத்தில் நடைபெறும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும். 2014 ம் ஆண்டுக்குரிய மாவட்ட மட்ட கண்காட்சியானது 17.07.2014ம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளரின் தலைமையில் நடைபெற்றது.





**கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதேச மட்ட சமாசம்**

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக மூன்று கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

01. நானாட்டான் கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதேச மட்ட சமாசம்
02. மாந்தை மேற்கு கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதேச மட்ட சமாசம்
03. மன்னாா நகரம் கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதேச மட்ட சமாசம்

**அவற்றின் பிரதான சேவைகள்**

01. பல்கலைக்ழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில வழங்கல்
02. சிரமதானப்பணிகளில் ஈடுபடல்
03. கலைஞர்களை ஊக்குவித்தல்
04. கிராம/ கிராம அபிவிருத்திச் சங்கங்களிற்கு சுழற்சி முறையில் கடன் வழங்கல்
05. வறிய மாணவர்களிற்கான சீருடைகள் வழங்கல்
06. அனர்த்த வேளையில் மக்களுக்கு உதவிபுரிதல்
07. கலாச்சார விளையாட்டு போட்டிகளை நடாத்தல்

### 5.3.3.திவிநெகும அபிவிருத்தி திணைக்களச் செயற்பாடுகள்

**“ திவிநெகும” தேசிய வேலைத்திட்டத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள். - 2014**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2013/01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் கீழ் 2014/01/03 ஆம் திகதி உருவாக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் மன்னார் மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டில் 13,166 பயனாளிகள் நிவாரணம் பெறுவதுடன் மேலும் 20,000 இற்கும் அதிகமான குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் அதிகபயனடைகின்றனர். இத்திணைக்களத்தின் பிரதான நோக்கமாக குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களின் வாழ்வதாரத்தை அபிவிருத்தி செய்வதுடன் வறுமையை தவிர்ப்பதுமாக காணப்படுகின்றது. இத்திட்டத்தில் தற்போது 09 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளும் 05 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச்சங்கங்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இவ்வங்கிச்சங்கங்களின் கீழ் 443 வாழ்வின் எழுச்சி கிராமிய சங்கங்களும், 2,925 வாழ்வின் எழுச்சி சிறுக்குழுக்களும் தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்றன. 2014 ஆம் ஆண்டில் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்கள் கீழ் வருமாறு.

- **நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள்.**

| தொ.இல | நிகழ்ச்சித் திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | நிதிச் செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 01 | நிவாரணக் கொடுப்பனவு | 13,166 | 200.3 மில்லியன் | 200.3 மில்லியன் |
| 02 | போசாக்கு கொடுப்பனவு | 1,630 | 9.4 மில்லியன் | 8.6 மில்லியன் |
| 03 | சமூக பாதுகாப்பு கொடுப்பனவு | 4,594 | 9.8 மில்லியன் | 9.8 மில்லியன் |
| | **மொத்தம்** | **19,390** | **219.5 மில்லியன்** | **218.7 மில்லியன** |





➢ **வாழ்வாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம்.**

| தொ. இல | நிகழ்ச்சித் திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | நிதிச் செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 01 | வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம். | 664 | 5.00 மில்லியன் | 5.00 மில்லியன் |
| 02 | புது வருட சந்தை | 5 பி.செயலகங்கள் | 0.3 மில்லியன் | 0.3 மில்லியன் |
| 03 | சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம். | 5 பி.செயலகங்கள் | 0.88 மில்லியன் | 0.77 மில்லியன் |
| **மொத்தம்** | | | 6.18 மில்லியன் | 6.07 மில்லியன் |





➢ **வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களினால் வழங்கப்பட்ட வேலைத்திட்டங்கள்.**

| தொ. இல | நிகழ்ச்சித் திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | நிதிச் செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 01 | இசுருமத் நிவகணக் | 13,166 | 32.9 மில்லியன் | 32.9 மில்லியன் |
| 02 | வங்கி மீள்கட்டுமான செலவு | 5 வங்கி | 3.13 மில்லியன் | 3.13 மில்லியன் |
| 03 | வங்கியால் வழங்கப்பட்ட கடன்கள் | 2,010 | 97.5 மில்லியன் | 97.5 மில்லியன் |
| 04 | சகண அருண விசேட கடன் திட்டம் | 993 | 6.92 மில்லியன் | 6.92 மில்லியன் |
| **மொத்தம்** | | | **140.45மில்லியன்** | **140.45மில்லியன்** |





## 5.3.4.காணி விவசாய திணைக்களச் செயற்பாடுகள்

- **சேதன உர உற்பத்திதிட்டம்**

இத்திட்டத்திற்கென 3.103 மில்லியன் நிதியானது விவசாய அமைச்சினால் ஒதுக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் 2,000 பயனாளிகள் தெரிவு செய்யயப்பட்டு அவர்களுக்குரிய உரவகையளும் (rock phosphate) பொலித்தீன்களும் அதற்குரிய சிறிய உபகரணங்களும் 500 வரையான செயன்முறைப்பயிற்சிகளும் வழங்கப் பட்டதோடு இதற்கென ரூ1,832,186.50 செலவிடப்பட்டு மிகுதிப்பணம் திரும்ப அனுப்பப்பட்டது.

- **வர்த்தக ரீதியியவான பண்ணை அபிவிருத்தித் திட்டம் - திராட்சை**

விவசாய அமைச்சினால் 4 பயனாளிகளுக்கு 50% மானிய முறை அடிப்படையில் வழங்கப்பட்ட 500,000.00 இல் 400 கற்துாண்கள் ரூ420,000.00 க்கு கொள்ளனவு செய்யப்பட்டு மிகுதிப்பணம் திரும்ப அனுப்பப்பட்டது. எனினும் இக்கற்றுாண்கள் இன்னும் பயனானிகளுக்கு வழங்கப்படவில்லை.

- **வாழ்வின் எழுச்சித்திட்டம் VI**

இத்திட்டம் மாவட்ட திட்டமிடல் செயலகத்துடன் சேர்ந்து நடைமுறைப்படுத்தப் பட்டது. இதற்கமைவாக 27,529 பழ மரக்கன்றுகள் ரூ.2,891,185.00 செலவிலும் மேலும் 11,475 அகத்திக்கன்றுகள் ரூ459,000.00 செலவிலும் கமநல கேந்திர நிலையங்களினுாடாக பயனானிகளுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் உளளுர் நாற்றுப் பண்ணையாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

**இலவச விதைநெல் விநியோகம் தொடர்பான அறிக்கை**

| விபரம் | மன்னார் நகரம் | நானாட்டான் | மாந்தை மேற்கு | முசலி | மடு |
|---|---|---|---|---|---|
| செலவினம் | 16,686,600.00 | 39,526,900.00 | 35,594,600.00 | 19,661,700.00 | 8,953,700.00 |
